விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 18 வியாழக்கிழமை (03.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227

# முறிமோசடி; ரவி ஆஜர்
# குற்றம் நிரூபணமானால்
# கடும் நடவடிக்கை!



## அமைச்சர் ராஜித உறுதி

(கொழும்பு) மத்திய வங்கியின் திறைசேரி பிணை முறிப்பத்திர விவகாரத்தில் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க செய்தவை குற்றம் என நிரூபிக்கப்படுமானால் அரசாங்கம் மற்றும் கட்சி அவர் சம்பந்தமாக கடும் நடவடிக்கையை எடுக்கும் என சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்கம் பார்க்க...)

### வாள்வெட்டு
## மேலும் ஒரு நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது 23☛

### க.பொ.த (உ/த)
## வகுப்புக்களுக்கு நேற்றிலிருந்து தடை

(கொழும்பு)

எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் 24☛

### சைட்டம் எதிர்ப்பு;
## தடை கோரிய மனு தள்ளுபடி

(கொழும்பு)

சைட்டம் எதிர்ப்பு போராட்டத்தினை தடை செய்யக்கோரி தாக்கல செய்த மனு நீதிமன் 23☛

### தன்னிச்சையாக தமிழரசுக்கட்சி
## ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலொ வவுனியாவில் நேற்று சந்திப்பு!

(குருமன்காடு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் தமிழரசுக் கட்சி தவிந்த ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் திடீர் சந்திப்பு ஒன்றை வவுனியாவில் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று மாலை வவுனியா, புகையிரத நிலையம் அருகில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்புக்கு ஊடகங்கள் அனுமதிக்கப்படாத நிலையில் இது தொடர்பில் கலந்து கொண்ட அரசியல் பிரமுகர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்ட 23☛

## முச்சக்கரவண்டிகள் விபத்து; வயோதிபப் பெண் மரணம்

(பரந்தன்)

கிளிநொச்சி சேவையர்கடை சந்திக்கு அருகாமையில் நேற்று முற்பகல் இரண்டு முச்சக்கரவண்டிகள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் கருணாநிதி சின்னம்மா என்ற வயோதிபப்பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து முறிப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டியை சேவையர்கடை சந்திக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றிற்கு முன்னால் நிறுத்தி விட்டு சாரதி கடைக்கு சென்றுள்ளார்

அவ்வேளையில் அதே திசை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மற்றுமொரு முச்சக்கர 24☛

## வடக்கு சபை உறுப்பினராக ஜெயசேகரம் பதவிப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணசபையின் புதிய உறுப்பினராக தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்.வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

மானிப்பாயில் உள்ள 23☛

## அரசியல் கைதிகளின் வழக்குகளை தென்பகுதிகளுக்கு மாற்றக்கூடாது
### முதலமைச்சரிடம் உறவுகள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் கைதாகியுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை சிங்களப் பகுதிகளுக்கு மாற்றுவதற்கு முனைப்பு காட்டி வருகின்றது. ஆகவே இதனைத் தடுத்து தொடர்ந்தும் எமது உறவுகளின் வழக்குகளை தமிழ்ப் பிரதேசங்களிலேயே நடத்த அரசிற்கு அழுத்தம் வழங்க வேண்டும் என கோரியுள்ள தமிழ் அரசியல் கைதி 24☛



சைட்டத்திற்கு எதிரான போராட்டமும் நடைபயணமும் பல்வேறு அரசியல்கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அருகில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

## சுற்றிவளைப்பு; 2717 பேர் கைது

(கொழும்பு)

பொலிஸார் மேற்கொண்ட நாடு தழுவிய விசேட பொலிஸ் நடவடிக்கைகளில் 2 ஆயிரத்து 717 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் மேற்பார்வையின் கீழ் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்றுக் காலை வரை நாட்டின் அனைத்து பொலிஸ பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போதே இவர்களை 23☛

### வித்தியா படுகொலை வழக்கு;
## தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஊடாக அழைப்பு விபரம் திரட்டு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கூட்டுப்பாலியல் வன்புணர்வு கொலை தொடர்பில் குற்றச் சம்பவம் இடம்பெற்ற இடத்தைச் சுற்றி காணப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அழைப்புக்களின் விபரம் பெறப்பட்டு அது தொடர்பாகவும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தொலைத்தொடர்பு தகவல்களின் ஊடாக இவ்வழக்கின் சந்தேக நபர்களுடன் நடராசா குகனேசன் (மாப்பிள்ளை) என்பவர் தொலைபேசியூடாக சம்பவத்திற்கு முன்னைய நாள் தொடர்பு கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது. என இவ் வழக்கின் புலனாய்வு விசாரணைகளை 22☛

### பொலிஸார் மீது வாள்வெட்டு
## கைதான இருவருக்கும் 10-ம் திகதி வரை மறியல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் பகுதியில் வைத்து பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது. 24☛



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்ய ஜனாதிபதி வழங்கிய புராதன வாள்

# ஜனாதிபதி மைத்திரி தலைமையில் தேசிய மரபுரிமையாக்கப்பட்டது

(கொழும்பு)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினினால் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்ட புராதன வாள் தேசிய மரபுரிமையாக்கப்பட்டு தேசிய நூதனசாலைக்கு ஒப்படைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று தேசிய நூதனசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

44 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கை அரச தலைவர் ஒருவருக்கு ரஷ்யாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்துக்கான அழைப்புக்கமைய கடந்த மார்ச் மாதம் ரஷ்யாவில் மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட உயர் வரவேற்பாக ரஷ்ய ஜனாதிபதியினால் இந்த புராதன வாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டது.



தொல்லியல் பெறுமதியுடன் கூடிய இந்த வாள் கண்டி யுகத்துக்கு உரியதாகும். 1906ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் அங்கு நடைபெற்ற புராதன தொல்பொருள் ஏலவிற்பனையில் ரஷ்யாவினால் அது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வாள் மிகவும் அரிய வகை அரச ஆயுதம் என்பது மட்டுமல்லாமல் வரலாற்று ரீதியிலும் பெறுமதியுடைய அரிய வகை படைப்பாகும். ரஷ்ய கூட்டரசாங்கத்தின் குற்றவியல் சட்ட கோவையின் 243ஆம் பிரிவில் உள்ளடங்கும் புராதன பெறுமதியுடைய பொருட்கள் மற்றும் பண்பாட்டு பெறுமதியுடன் கூடிய பொருட்களுக்கு சேதம் விளைவித்தல், அழித்தல் குற்றமாக கருதப்படுகிறது. அந்த புராதன பொருட்களை பாதுகாக்கும் பிரிவில் இந்த வாளும் உள்ளடங்கியது.

இந்த பெருமைமிகு பரிசை தேசிய உரிமையாக்கி, தேசிய நூதனசாலையில் வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்னவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதற்கான நன்றிக் கடிதம் மற்றும் நினைவுப் பரிசு தேசிய நூதனசாலை பணிப்பாளர் சனூஜா கஸ்தூரியாராச்சியினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவை சபையின் தலைவர் கலாநிதி டபிள்யூ.ஏ. அபேசிங்க, உலகின் பிரபல மான தலைவரிடமி ருந்து கிடைத்த இந்த பெருமைமிகு பரிசை தனது சொந்த பொருளாக எடுக்கா மல் அதனை தேசிய மரபுரிமையாக மாற்றி உரிய இடத்தில் வைக்க நடவடிக்கை எடுத்ததன் மூலம் அரச தலைவராக ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன இந்த நாட்டின் கலா சார மற்றும் தேசிய மர புரிமைகள் தொடர் பில் கொண்டிருக்கும் சரியான மனப் பாங்கு சிறப்பாக வெளிப்படுவதாகவும் அது தொடர்பில் அவருக்கு முழு தேசத்தினதும் கௌரவம் கிடைக்க வேண்டும் என தெரி வித்தார்.

தேசிய நூதனசாலையை பார்வையிட்ட ஜனாதிபதி, ஆயுத கூடத்தில் வைக்கப்பட்டிருந்த வாளையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான எஸ்.பி. நாவின்ன, எஸ்.பி.திஸாநாயக்க, விஜேதாஸ ராஜபக்ஷ, கயந்த கருணாதிலக்க, அகில விராஜ் காரியவசம், பிரதி அமைச்சர்களான பாலித்த தெவரப்பெரும, கருணாரத்ன பரணவிதான ஆகியோரும் ரஷ்ய தூதுவர் உள்ளிட்ட உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (செ-11)


அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



திருமதி சு.டுயந்தினி (PGDE)

எமது பாடசாலையில் சங்கீத பாட ஆசிரியராகப் பணியாற்றுகின்ற திருமதி சு.டுயந்தினி அவர்கள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 18.07.2017இல் நடைபெற்ற 29ஆவது பட்டமளிப்பின்போது பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டம் பெற்று கொண்டமையை மனதார வாழ்த்தி அவர் கல்விச் சேவையில் மேன்மேலும் பல பட்டங்களை பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
கிளி/வேம்போடுகேணி
சி.சி.த.க பாடசாலை, இத்தாவில், பளை

(010)



யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்
இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம், கோயம்புத்தூர் காலைக்கதிரவன் லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்தும் மேற்படி முகாமில் குழந்தைப்பேறற்ற தம்பதியினர் குழந்தையை பெற்றுக்கொள்வதற்கான இலவச பரிசோதனைகள், ஆரம்ப சிகிச்சை, ஆலோசனைகளும் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சனைகளுக்கான பரிசோதனைகள், ஆலோசனைகளும் வழங்கப்படும்.

| | |
|---|---|
| திகதி :- 05.08.2017<br>சனிக்கிழமை<br>இடம் :- இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபம் கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.<br>நேரம் :- 09 am - 03 pm | திகதி :- 06.08.2017<br>ஞயிற்றுக்கிழமை<br>இடம் :- *Loyola's* திருமணமண்டபம் சேன்பற்றிக் வீதி, யாழ்ப்பாணம்.<br>நேரம் :- 09 am - 03 pm |

குழந்தை பேறற்றோருக்கான மருத்துவ நிபுணர்கள் :-
* *Dr. Vasanti Nitinlad*
* *Dr. Lad Nitin Laxmikant*

கண் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு மருத்துவ நிபுணர் :-
* *Dr. Sarviya Divyagnan Bharatkumar.*

பயன்பெற விரும்பும் அனைத்து அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்பு கொள்ள *Tel No:-* 0770367136 / 0773657062

லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணம்

(சி-4233)


# பேஸ்புக் அவதூறு; பொலிஸில் முறைப்பாடு

முகப்புத்தகத்தில் மலையக மக்களை இழிவுபடுத்தி காணொலி மூலமாக பேசிய கச்சாய் சிவம் என அழைக்கப்படும் வெளிநாட்டில் வசிக்கும் நபர் ஒருவருக்கு எதிராக வடக்கு, கிழக்கு வாழ் மலைய மக்களின் ஒன்றியம் நேற்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளது.

கச்சாய் சிவம் என அழைக்கப்படும் யாழ். கச்சாயைச் சேர்ந்த நபர் ஒருவர் தற்போது வெளிநாடொன்றில வசித்து வருகின்றார். இவர் மலையக மக்களை இழிவுபடுத்தி, தரம் தாழ்த்தி பேசி அதனை தனது முகப் புத்தகத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். இது வேகமாக இணையங்களிலும், முகப் புத்தகங்களிலும் பரவிய நிலையில் இது தொடர்பில் வடக்கு, கிழக்கு வாழ் மலையக மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். இந்நிலையில் குறித்த நபரின் செயறபாட்டுக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கு, கிழக்கு வாழ் மலையக மக்கள் ஒன்றியத்தால் வவுனியா பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-250)


TCT Multi Trade Centre இல்
காணப்படும் உடனடி பதவி வெற்றிடங்கள்

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்-Security Guards 24000 ரூபாய் ஆரம்ப சம்பளமாக வழங்கப்படும்.

சைவ உணவகத்திற்கு றொட்டி, பலகாரங்கள் தயாரிக்க கூடிய ஒருவர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

முகாமையாளர்
TCT Multi Trade Centre
இல.527, நாவலர் வீதி, நல்லூர்
தொடர்புகளுக்கு:-0777763436

(சி-9240)



ஐந்தாமாண்டு நினைவஞ்சலி

திருமதி ஜெயம் சரஸ்வதி
பிறப்பு:-16-01-1954
இறப்பு:-29-07-2012



அன்பால் எமையணைத்து
அமுதமொழி பேசி
இன்பமாய் வாழ வைத்து
இனிய முகம் மலர்ந்து
வன்சொல் அறியாது
வாழ்ந்த அம்மாவே!
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
அம்மாவின் பாசமுகம்
எங்களுயிர் உள்ளவரை எம்மை
விட்டு நீங்காதம்மா!

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.

தங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் அதிரடிப் படையினர் வடக்கில் களமிறக்கம்

## வன்முறைகளைக் கட்டுப்படுத்த என்கிறது சிங்கள ஊடகம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பொறுப்பு சிறப்பு அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 1000 இற்கும் அதிகமான சிறப்பு அதிரடிப்படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

சிறப்பு அதிரடிப்படையினர் குழுக்களாக ரோந்து, உந்துருளி ரோந்து, சோதனை, போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னர் இவர்கள் இரவில் மாத்திரம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும், அண்மையில் குடாநாட்டில் இடம்பெற்ற சில சம்பவங்களை அடுத்து, நாள் முழுவதிலும் சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறப்பு அதிரடிப்படைக்கு மேலதிகமாக சிறப்பு பொலிஸ் குழுக்களும் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வன்முறைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக, புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸ் தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கென பொலிஸ் புலனாய்வுக் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (இ-7)



யாழ்ப்பாணத்தில் திடீரென இராணுவத்தினர் வீதிகளில் பணியில் ஈடுபடுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நந்தாவில் பகுதியில் இரு பொலிஸார் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து யாழிற்கு திடீரென விஜயம் மேற்கொண்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, குற்றச்செயல்களை கட்டுப்படுத்த, இராணுவம், கடற்படை மற்றும் விசேட அதிரடிப்படை ஆகியோரின் உதவிகளைப் பெறவுள்ளதாக கூறியிருந்தார். இதனை அடுத்தே நேற்று முன்தினம் முதல் யாழ்ப்பாணத்தின் பிரதான இடங்களில் படையினர் நிலை கொண்டுள்ளனர். இது தவிர விசேட அதிரப்படையினர் மோட்டார் சைக்கிள்களில் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(படங்கள்:-உ. சாளின்)

## 6 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கான்ஸ்டபிள் கைது!

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பெல்மடுலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சந்தேக நபர் 6000 ரூபா பணத்தை இலஞ்சமாக பெற முற்பட்டதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

ஆட்டோ விபத்தொன்றின் போது, சட்ட நடவடிக்கை எடுக்காதிருக்கவே அவர் இவ்வாறு இலஞ்சம் பெற முற்பட்டதாக, பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

## யானை தாக்கி விவசாயி பலி!

அம்பாறை மாவட்டம், அலிக்கம்பை வயல் பிரதேசத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆலையடிவேம்பு கோளாவில் பகுதியை சேர்ந்த வைரமுத்து நடராசா (வயது-63) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று புதன்கிழமை அதிகாலை அலிக்கம்பை வயல் பிரதேசத்தில் வழமை போன்று காவல் கடமையின் நிமித்தம் பரன் குடிசை ஒன்றில் இவர் உறக்கத்திலிருந்தபோது யானை தாக்கியுள்ளது.

இதனையடுத்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை ஏழு மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## டெங்கு ஒழிப்பு திட்டத்திற்கு 2000 பேர் கொண்ட குழு

வேகமாக பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட ஏற்பாடொன்றை முன்னெடுக்குமாறு தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவினருக்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அதற்காக டெங்கு ஒழிப்பு அதிகாரிகள், முப்படை வீரர்கள் அடங்கிய 2000 பேர் கொண்ட குழு ஒன்று ஈடுபடுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், காலி, மாத்தறை, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் கூடிய அளவில் அவதானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பொலிஸார் மீது வாள்வெட்டு குறித்து அமைச்சரவையில் சிறப்பு அறிக்கை

கொக்குவிலில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு தாக்குதல் குறித்த சிறப்பு விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இரண்டு பொலிஸார் இனந்தெரியாத குழுவினரால் துரத்தித் துரத்தி வெட்டப்பட்டனர். படுகாயங்களுக்கு இலக்கான இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவினால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மற்றும் கண்டறிவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி உடன்படிக்கைக்கு அமைச்சரவை மீளவும் அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவை மீளவும் இந்த உடன்படிக்கைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சில திருத்தங்களுடன், எதிர்காலத்தில் திருத்தங்களைச் செய்யக் கூடிய வகையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.எஸ்.சி டெஸ்ட் இன்று ஆரம்பம் இலங்கை எழுச்சி பெறுமா?



இலங்கை - இந்திய அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

முதல் டெஸ்டை போலவே இந்த டெஸ்டிலும் இந்திய அணியின் அதிரடி தொடருமா? அல்லது இந்திய அணியின் அதிரடியை அடக்கி இலங்கை வெற்றி பெறுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் காலி மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் சம பலத்துடன் திகழும் இந்திய அணி மிகுந்த நம்பிக்கையுடன் இலங்கையை இப்போட்டியில் எதிர்கொள்கிறது.

காலி டெஸ்டில் தொடக்க வீரர்கள் தவான், அபினவ் முகுந்த் ஆகியோர் சிறப்பாக ஆடினார்கள். தவான் முதல் இன்னிங்ஸில் 190 ஓட்டங்களும் முகுந்த் 2ஆவது இன்னிங்ஸில் 84 ஓட்டங்களும் எடுத்து தமது துடுப்பாட்ட திறமையை நிரூபித்தனர். இந் நிலையில் கே.எல்.ராகுலும் உடல் தகுதி பெற்றுவிட்டார்.

இதனால் இன்றைய டெஸ்டில் தொடக்க வீரர்கள் வரிசையில் மாற்றம் இருக்குமா? அல்லது அதே அணி நீடிக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராகுலுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால் அபினவ் முகுந்த் நீக்கப்படுவார். மற்றும்படி வேறு எந்த மாற்றமும் இருக்காது என்றே தெரிகிறது.

இதேபோல அணித் தலைவர் விராட் ஹோலி, புஜாரா ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர். இருவரும் முதல் டெஸ்டில் சதம் அடித்து முத்திரை பதித்து இருந்தனர்.

புஜாராவுக்கு இன்றைய போட்டி 50-வது டெஸ்ட் ஆகும். அவர் இப்போட்டியில் 36 ஓட்டங்களை எடுக்கும் பட்சத்தில் 4 ஆயிரம் ஓட்டங்கள் பட்டியலில் இடம்பிடிப்பார். இது தவிர ரஹானே, ஹார்த்திக் பாண்டியா, விருத்திமான் சகா போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர்.

பந்து வீச்சில் அஸ்வின், ஜடேஜா, மொஹமட் ஷமி சிறப்பான நிலையில் உள்ளனர்.

இலங்கை அணியைப் பொறுத்தவரை காயம் காரணமாக முதல் டெஸ்டில் விளையாடாத அணித் தலைவர் சண்டிமல் அணியில் இடம்பெறுகிறார். இதேபோல திரிமனேயும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த இருவரது வருகையால் அணியின் துடுப்பாட்ட வரிசை பலம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உபுல் தரங்க, கருணாரத்ன, குணதிலக, ஹேரத், பெர்னாண்டோ போன்ற சிறந்த வீரர்களும் அணியில் உள்ளனர். முதல் டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுக்கும் ஆர்வத்தில் இலங்கை அணி உள்ளது. இப்போட்டியில் வெற்றி பெற்று 1-1 என்ற கணக்கில் தொடரை சமன் செய்ய இலங்கை வீரர்கள் கடுமையாக போராடுவார்கள்.

இரு அணிகளும் இன்று மோதும் போட்டி 40ஆவது டெஸ்ட் ஆகும். இதுவரை நடந்த 39 போட்டியில் இந்தியா 17இல், இலங்கை 7இல் வெற்றி பெற்றுள்ளன. 15 டெஸ்ட் சமனிலையானது.

இரு அணி வீரர்கள் விபரம்:-

இந்தியா: விராட் ஹோலி (அணித் தலைவர்), தவான், புஜாரா, ரஹானே, விருத்திமான் சகா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், மொஹமட் ஷமி, உமேஷ் யாதவ், ராகுல், குல்தீப் யாதவ்.

இலங்கை: சண்டிமல் (அணித் தலைவர்), உபுல் தரங்க, கருணாரத்ன, குசல் மெண்டீஸ், மத்யூஸ், டிக்வெல, டில்ருவன் பெரேரா, ஹேரத், தனஞ்செய டி சில்வா, நுவான் பிரதீப், மலிண்ட புஷ்பக்குமார.

## மாதாந்தம் ரூ.5 ஆயிரம் வரட்சி நிவாரணம்

(கொழும்பு)

நாட்டில் காணப்படுகின்ற வரட்சி நிலைமை காரணமாக இதுவரை 17 மாவட்டங்களை சேர்ந்த 5 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரதேச வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு கூப்பன் அட்டை வழங்கும் திட்டம் தொடர்பான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும், பயிர்ச்செய்கை பாதிப்புக்களுக்காக உரிய காப்புறுதி திட்டத்தின் கீழ் துரித கதியில் நட்டஈட்டினை பெற்றுக் கொடுப்பதற்கும், குடிநீர் வழங்கும் வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சமுர்த்தி நிவாரண மீளாய்வு;

# பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று ஒன்றுகூடி மகஜர் கையளிப்பு



சமுர்த்தி நிவாரண மீளாய்வின் போது பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கூடியதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சமுர்த்தி மீளாய்வின் போது பாதிக்கப்பட்ட அல்வாய் பகுதியைச் சேர்ந்த மக்கள் காலை 9.30 மணியளவில் பருத்தித்துறை டிப்போவுக்கு முன்னாள் கூடி பதாகைகளைத் தாங்கியவாறு பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து மகஜரினையும் கொடுத்தனர்.

இவர்கள் சென்றதன் பிற்பாடு 11.00 மணிக்கு தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த சமுர்த்தி பயனாளிகள் மீளாய்வின் போது பாதிக்கப்பட்டதாக தெரிவித்து அவர்களும் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டனர்.

மேற்படி சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடமும் இது தொடர்பாக ஆராய்வதாக பிரதேச செயலக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர். (செ-60)


## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகர சபை

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை, சபை நிதி மற்றும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்ட நிதி - 2017

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடம் மற்றும் வீதி நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ் விலை மனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 2216468, 021 2222019) என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலைநாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணி வரை 03.08.2017 - 24.08.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 03.08.2017ம் திகதியில் இருந்து 24.08.2017 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வற் (VAT) வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 25.08.2017ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு) நாட்களுக்கு (10.11.2017 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக் கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 21.08.2017 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப் பந்தக் காலம் | வேண் டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/06/PSDG/ 2017/16 | நெடுங்குளம்ப பிள்ளையார் 2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம் மற்றும் 8ம் ஒழுங்கைகள் அமைப்பு. | 5.871 | 02 மாதங்கள் | C7 வீதி | 59,000.00 | 08.12.2017 |
| 2 | JMC/WD/01/CF.Bu/ 2017/26 | யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத் திருத்தம் | 0.732 | 02 மாதங்கள் | C9 கட்டடம் | 8,000.00 | 08.12.2017 |
| 3 | JMC/WD/07/RAD/ 2017/01 | குகன் மற்றும் OFF வீதி புனரமைப்பு (Improvement of Kugan & Off Road) | 6.356 | 02 மாதங்கள் | C7 வீதி | 64,000.00 | 08.12.2017 |

தலைவர் / ஆணையாளர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம். (C-9241) 02.08.2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலரண் மீது தாக்குதல் நடத்தியதாக கைதான ஐந்துபேரும் 11ம் திகதிவரை மறியலில்

(குரணவாய்)

கடற்படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டமை, பொலிஸ் காவலரணை சேதமாக்கியமை தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த 09/07/2017 அன்று சட்டவிரோத மணல் ஏற்றி வந்த கன்டர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பலியானதையடுத்து பொலிஸ் காவலரண் ஒன்று சேதமாக்கப்பட்டது. மேலும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது வல்லிபுரம் பகுதியில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பில் விசாரணை செய்து வந்த பருத்தித்துறைப் பொலிஸார் கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறையில் வைத்து துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த ஐவரை கைது செய்து நேற்று முன்தினம் (01.08. 2017) நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை 11/08/2017 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-60)

# சாவகச்சேரியில் துணிப்பை தயாரிப்பு பயிற்சி நெறியின் ஆரம்பவிழா இன்று

சாவகச்சேரி நகர இளைஞர் கழகமும் சாவகச்சேரி நகராட்சி மன்றமும் இணைந்து நடத்தும் துணிப்பை தயாரிப்பு பயிற்சி நெறியின் ஆரம்பவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெறும்.

சாவக்சேரி நகர இளைஞர் கழகத்தலைவர் ஞா.கிஷோர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புனர்வாழ்வு புனரமைப்பு மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஏ.தவேந்திரன், கௌரவ விருந்தினராக ந.கவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-89)


## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

**கலைமாமணி**

**Dr.S.S.சர்மா குருஜீ**

82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

**077 784 1558** (சி. 8817)



## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# தரம்-5 மாணவர்களுக்கான இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை

தரம்-5 மாணவர்களுக்கான வலய மட்ட இறுதி மதிப்பீட்டுப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கோட்ட மாணவர்களுக்கு யாழ். பொஸ்கோ வித்தியாலயத்திலும் நல்லூர் கோட்ட மாணவர்களுக்கு யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையிலும் கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கு புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலையிலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் நா.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ-10-136)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 03 | 08 |
| 04 | 07 |
| 1926 | 2014 |

அமரர்.

## சின்னட்டியன் பசுபதி

திதி: 03.08.2017

அன்பின் திருவுருவாய் தேவி பவனத்தின் சொந்தக்காரனாய் நாவலம்பதி ஞானவயிரவர் ஆலயத்தின் சீரிய முகாமையாளராய் சமூகத் தலைவனாய் நீங்கள் வாழ்ந்த காலங்கள் எம் நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருக்கும். நீங்கள் மறைந்து மூன்று ஆண்டுகள் சென்று விட்டன. ஆனால் எட்டுத் திசையிலும் உங்கள் பெயர் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. எமது கிராமத்தில் கண்ணியம் தவறாத தலைவனாக அனைவரிடத்தும் அன்பு காட்டும் ஆசானாக உறவுகளையெல்லாம் உள்ளன்போடு அரவணைத்து வாழ்ந்து மறைந்துவிட்ட எங்கள் இதய தெய்வமே. உங்கள் பிரிவுத் துயரின் மாறாத நினைவுகளோடு அன்பே உருவான தங்களின் உன்னத ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

## ஊரெழு கிழக்கு
## அமரர். சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியம் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா

**காலம் - 03.08.2017 வியாழன் பகல் 11 மணி**
**இடம் - ஊரெழு நாவலம்பதி ஞானவயிரவர் பொதுநோக்கு மண்டபம்**

தலைவர்:
**கவிமணி க. ஆனந்தராசா**
(அன்னைதாசன்-ஓய்வுநிலை அதிபர்)

பிரதம விருந்தினர்:
**உயர்திரு சுகுணரதி தெய்வேந்திரம்**
(மேலதிக அரசாங்க அதிபர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்
**திருமதி சுபாஜினி மதியழகன்**
(பிரதேச செயலர் வலி.கிழக்கு கோப்பாய்)
**கலாநிதி த.கலாமணி**
(சிரேஷ்ட விரிவுரையாளர்.கல்வியியற்றுறை. யாழ். பல்கலைக்கழகம்)
**திரு.அன்ரன் பிறேமதாஸ்**
(அதிபர். ஊரெழு கணேச வித்தியாசாலை)
**திரு.வ.குலத்துங்கன்**
(கமநல அபிவிருந்தி உத்தியோகத்தர். உரும்பிராய்)

மதிப்புறு விருந்தினர்கள்
**திரு.ஐ.மகேந்திரன்**
(தலைவர், வளர்பிறை சனசமூக நிலையம்)
**திரு.ம.றெ.ஜெயதரன்**
(கிராம உத்தியோகத்தர். ஊரெழு)
**திரு.இ.தர்மகுலசிங்கம்**
(தலைவர் நாவலம்பதி ஞானவயிரவர் திருக்கோவில்)
**திருமதி. யசோதினி ரதீஸ்கரன்**
(பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர். ஊரெழு)
**திரு.இ.மன்மதராசன்**
(தலைவர். சர்வதேச ஒன்றியம், ஊரெழு)

(9656)

சிவஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி குருக்களின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.தொடர்ந்து பிரதம, சிறப்பு விருந்தினர்களின் உரையுடன் பாடசாலை, ஆலயம், சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு நிதி அன்பளிப்பு வழங்குவதுடன் 2016ஆம் ஆண்டின் கல்விச் சாதனையாளர்கள், 80 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் விருந்தினர்களால் கௌரவிக்கப்படவுள்ளனர். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு — சின்னட்டியன் பசுபதி நிதியம்

# இராசி பலன்

03.08.2017
(ஆடி 18, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
ஏகாதசி மாலை 6.08 மணிவரை
கேட்டை முன்னிரவு 8.19 மணிவரை
சுபநேரம் 7.34 -9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பரணி-கார்த்திகை<br>இரவு 8.29 மணிக்கு<br>தனு-சந் | | சூரி<br>ராகு<br>செவ் |
| | | | புத |
| | சனி<br>சந் | | குரு |

**மீனம்:** தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**மேடம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், புதிய விடயங்களை யோசித்து ஏற்பது நல்லது.

**இடபம்:** செய்தொழில் முன்னேற்றமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், கடன் பாக்கிகளை வசூலாக்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், செயற் பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்தினர் வருகையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**சிம்மம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மனதில் இனம் புரியாத கற்பனைகள் தோன்றி மறையும்.

**துலாம்:** புதிய திருப்பங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் என்ன நடக்கிறது என்பதை தெற்கில் கூற வேண்டும்

## பொலிஸ்மா அதிபரிடம் யாழில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், வாள்வெட்டுச் சம்பவங்களால் மீண்டும் புலிகள் வந்து விட்டனர் என்றும் பயங்கரவாதம் மீண்டும் தோன்றியுள்ளதாகவும் தென்னிலங்கையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில் யாழிற்கு நேரடியாக வந்து நிலைமைகளை ஆராய்ந்துள்ள பொலிஸ்மா அதிபர் இங்குள்ள உண்மையான நிலைமைகளை தென்னிலங்கையில் எடுத்துக் கூற வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள பொலிஸ்மா அதிபர் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் பல தரப்பினர்களையும் சந்தித்து ஆராய்ந்து வருவதுடன் அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளார்.

இதற்கமைய நேற்று முன்தினம் யாழ்.பொலிஸ் நிலைய மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களின் உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் போது உரையாற்றிய பொலிஸ்மா அதிபர் பயங்கரவாதம் குறித்தும் புலிகள் குறித்தும் பேசியிருந்தார்.

இதன்பின்னர் பொலிஸ்மா அதிபர் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டார். இதன் போது கேள்விகளுக்கும் பதில்களை வழங்கினார்.

பொலிஸ்மா அதிபரிடம் கேள்வியெழுப்பிய ஒருவர், யாழில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நல்லூர்ப் பகுதியில் வைத்து நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றைய ஒருவர் காயமடைந்திருந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து புலிகள் மீளவும் வந்துவிட்டார்கள் என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் பிரசாரம் செய்கின்றனர். ஆனால் இங்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் நேரடியாக வந்து பார்த்துள்ளீர்கள். ஆகவே இங்கு என்ன நடந்தது என்பதனை தென்னிலங்கையில்சென்று சொல்ல வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பேசிய சிவில் பாதுகாப்புக் குழுவின் மற்றைய உறுப்பினர் ஒருவர் பயங்கரவாதம் குறித்து பொலிஸ்மா அதிபர் பேசியிருக்கின்றதாகவும் எங்களிடம்பயங்கரவாதம் இல்லை என்பதை ஆணித்தரமாக கூறுவதாகவும் தெரிவித்தார். மேலும் வாள்வெட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் தான் இருப்பதாகவும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். (இ-4)

### காணி சீர்திருத்த ஆணைக்குழுவில்

## காணிகளைப் பெற்றவர்கள் ஆவணத்தை பெறவேண்டும்

காணி அமைச்சின் கீழ் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து காணிகளைப் பெற்றவர்கள் அதற்குரிய சட்டபூர்வமான ஆவணத்தைப் பெற வேண்டும். அவ்வாறு பெறத் தவறும் பட்சத்தில் அக் காணிகளை மீளக் காணிசீர்திருத்தஆணைக்குழு பெற்றுக் கொள்ள நேரிடும். கடந்த கால யுத்த சூழ்நிலைகள் காரணமாக காணி உரிமையாளர்கள் அதற்குரிய ஆவணத்தை பெறமுடியாமலிருந்தது. அச்சூழ்நிலையில் வடக்கு மாகாணத்திலும் காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் இயங்கவில்லை. தற்போது வடக்கு மாகாணத்திற்குரிய வடக்கு வலய அலுவலகம் யாழ்.மாவட்டச் செயலக புதிய கட்டடத் தொகுதியில் செயற்பட்டு வருகின்றது. இங்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில் தற்போது தகவல்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. எனவே காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய சட்டபூர்வ ஆவணத்தை அதன் உரிமையாளர்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள காணி சீர்திருத்த வடக்கு வலய அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆவணங்களைப் பெற்றிருந்து அதனை யுத்த சூழ்நிலையினால் தவறவிட்டவர்களும்பதிவினைமேற்கொண்டு புதிதாக பெற்றுக் கொள்ளலாம். எனவே காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட காணிகளுக்குரிய ஆவணங்களைசட்டப்படிபெற அதன் உரிமையாளர்கள் முன்வர வேண்டும் என யாழ். மாவட்ட செயலக காணி சீர்திருத்த ஆணைக்குழு உதவிப் பணிப்பாளர் தி.விமலன் தெரிவித்துள்ளார். (இ)




## சின்மயானந்தரின் சமாதிதினம் இன்று

குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் சமாதி தினம் இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சின்மயாமிஷன், புதிய காணியில் (இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூர்) வதிவிட ஆச் சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா தலைமையில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் குருபாதுகா பூஜை,பஜனை,சத்சங்கம் என்பன இடம்பெறவுள்ளன. (இ-3)

## சாவகச்சேரி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அருந்தவபாலனுக்கு சுமந்திரன் பகிரங்க எச்சரிக்கை





(யாழ்ப்பாணம்)

அரசியல் ரீதியான கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டாம். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற முறையில் உங்களை எச்சரிக்கின்றேன் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமிழரசுக்கட்சியின் சாவகச்சேரி தொகுதிக்கிளை தலைவரும் ஓய்வு நிலை அதிபருமான க.அருந்தவபாலனுக்கு பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார்.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன். பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் மற்றும் பிரதேச செயலர் தேவநந்தினி பாபு ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக திணைக்களங்கள் சார்ந்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் பொதுச்சந்தை மற்றும் வீதிகள் புனரமைப்பு போன்றன பிரதேச சபைக்கு நிதி போதாமையால் மேற்கொள்ளபடுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சுமந்திரன், பிரதேச சபையினை இரண்டாக பிரித்து அதன்மூலம் அபிவிருத்திக்கான நிதியினை பெற்று வேலைத் திட்டங்களை முன்னெடுக்கலாம் என தெரிவித்தார். பிரதேச சபையினை இரண்டாகப் பிரிக்கின்ற போது பிரதேச செயலகம் இரண்டாகப் பிரிப்பதும் இலகுவாக அமையும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அருந்தவபாலன், கடந்த வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு தீர்மானத்தின்படி பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான விண்ணப்பம் செய்யப்பட்ட போதும் அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. இதனை இங்கே இருக்கின்ற அமைச்சர், அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அரசாங்கத்தோடு மிக நெருக்கமான உறவைப் பேணுகின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் இது தொடர்பில்நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்ததோடு பொதுமக்கள் சார்பான நியாயமான கருத்துக்களை தொடர்ந்து முன்வைத்தார்.

அருந்தவபாலனின் கருத்துக்கு அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என மண்டபத்தில் இருந்த அனைவரும் கைதட்டி வரவேற்றனர்.

இதனால் கடும் சினமடைந்த சுமந்திரன் அருந்தவபாலனை நோக்கி கைதட்டுவதற்கு ஆட்களைக் கூட்டிக் கொண்டு வந்து இருத்தி விட்டு அரசியல் ரீதியாக கதைக்கவேண்டாம். உங்களை இணைத்தலைவர் என்ற வகையில் இனிமேல் இவ்வாறு பேசவேண்டாம் என நான் எச்சரிக்கின்றேன் என்றார்.

அருந்தவபாலனை பேச விடாது சுமந்திரன் எச்சரிக்கை விடுத்த போது சபையில் சலசலப்பு ஏற்பட்டது. இதன்போது கூட்டத்தை நடத்துகின்ற தலைவர் இவ்வாறு சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என அருந்தவபாலன் தெரிவித்த போது நான் இவ்வாறுதான் பேசுவேன், நான் இணைத்தலைவர் என சுமந்திரன் பதிலளித்தார்.

இதன்பின் கூட்டம்வழமை போல் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது இணைத் தலைவரான சுமந்திரன் இடை நடுவில் வெளியேறிச் சென்றார். இதையடுத்து இணைத் தலைவரான விஜயகலாவும் வெளியேறினார்.

எனினும் இன்னொரு இணைத் தலைவரான அங்கஜன் தலைமையில் தொடர்ந்து 6 மணி வரை கூட்டம் இடம்பெற்றது.

இதில் மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட திணைக்களங்களின் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-89)







யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அமெரிக்க பசுபிக் பிராந்திய கட்டளை மையத்தின் நிதியுடன் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதி திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை கல்லூரி அதிபர் விமலாதேவி விமலநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் அமெரிக்கத் துணைத் தூதர் றொபேர்ட் கில்ரன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவனும் யாழ்.பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்ஷனின்10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிலக்ஷன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட தினமான நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பா ணம் பிரதான வீதியிலுள்ள ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் மாலை அணிவித்து மலரஞ்சலியும் சுடரேற்றலும் நடைபெற்ற பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் கலையரங்கில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

(படங்கள்:- உ.சாளின், பொ.சோபிகா)

# சுவிஸிற்கு புலம்பெயர்ந்துள்ள இலங்கையர்களை நாடு திரும்புமாறு அமைச்சர் சுவாமி கோரிக்கை

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து வாழ் இலங்கையர்களை நாடு திரும்புமாறும் நாட்டுக்கு திரும்பி. நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குமாறும் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

சுவிட்சர்லாந்தில் சுமார் 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வாழ்ந்து வருவதாக புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்து வாழ் இலங்கைச் சமூகம், சுவிட் சர்லாந்திற்கு காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருவதாகத்தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்து தேசிய தினத்தை முன்னிட்டு இலங் கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் Heinz Walker- Nederkoom இன் இல்லத் தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

KING STAR TRAVELS & TOURS

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் 223, Stanly Road, Jaffnaல் இயங்கி வரும் King Star Travels and Tours விமான பயணச்சீட்டு அலுவலகத்திற்கு வேலையாட்கள் தேவைப்படுவதால் வேலை செய்ய விரும்புபவர்கள் தங்களது சுயவிபரக் கோவையுடன் 04.08.2017 அன்று காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை நேர்முகத் தேர்வுக்கு சமுகம் தரவும்.

அத்துடன் Air Ticketing வகுப்புக்கள் தற்போது நடைபெற்று கொண்டிருப்பதுடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாக இருப்பதால் படிப்பை தொடர விரும்புபவர்களும் எங்களுடைய முகவரியை அல்லது தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும். மிகவும் குறைந்த கட்டணத்துடன் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளதால் முந்துபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (சி-9238)

தொடர்புகளுக்கு: 0217223407, 0772445902

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்.

## ஏல விற்பனை

எமது பாடசாலையில் பழைய கட்டடங்கள் புனரமைக்கும் போது அகற்றப்பட்ட ஜன்னல், கூரைத் தகடுகள் 05.08.2017 அன்று பி.ப 3.00 மணிக்கு ஏலவிற்பனையில் விற்கப்படவுள்ளது. பொருட்கள் தொடர்பான தகவல்கள் யாவும் பாடசாலை விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஏல விற்பனையில் கலந்து கொள்வோர் அதற்கு முன் பாடசாலை நேரத்தில் பொருட்களைப் பார்வையிடலாம்.

(சி-9237) -அதிபர்-

## மாணவர் ஒன்றிய அழைப்பாளரின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் லஹிரு வீரசேகரவின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் அவரின் விளக்கமறியல் காலம்



நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன்மாதம் லஹிரு கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்பை வெளியிட்டு பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத் தின் போது சுகாதார அமைச்சின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பிலேயே லஹிரு கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

யாழ் மண்ணில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்

பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்
இணைந்து வழங்கும்

இன்னிசை பாடிவரும்...

மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி

500/=,1000/= டிக்கெட் கொள்வனவு செய்பவர்களுக்கு ஆசன வசதி உண்டு.

மாலை 6 மணிக்கு

இம் மாதம்
ஆகஸ்ட் 12 இல்



நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்

யாழ். ஸ்ரான்லி ரோட்,
வெலிங்டன் தியேட்டர் மைதானம்

Event Management C.A.C

Tel: 077 550 4910

டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 7இல்<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6661 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: சூரிசெவ் 3இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/6860 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 56 செவ் 7இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில் USA<br>தொ.இ: B/6664 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6862 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/ குருக்கள்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/6667 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:செவ் 1இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/6864 |
| பிறப்பு: 1959 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>தகைமை/தொழில்:SSC/ அவுஸ்ரேலியா PR<br>தொ.இ: B/6669 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: செவ் 1இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/6864 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சியிலும் கவனயீர்ப்பு





நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணி முதல் 2 மணி வரை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக மருத்துவர்கள் மற்றும் மருத்துவபீடம் மற்றும் பொறியியல் பீட மாணவர்கள் ஆகியோர் இணைந்து இக்கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதனை நிறுத்த கோரியே இக் கவனயீர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சைட்டம் எதிர்ப்பு மக்கள் அரண் எனும் அமைப்பினார் இதனை மேற்கொண்டுள்ளனர்.

சைட்டம் தனியார் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம், பொறியியல் பீடம், சட்டத்துறை பீடம் என பல பீடங்கள் உள்ள போதும்,



மருத்துவ பீடத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நாட்டில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(8-312)

# பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை அச்சத்தில் தாண்டிக்குள மக்கள்

(வவுனியா)

வவுனியா ஏ-9 வீதியையும், காளிகோவில் வீதியையும் இணைக்கும் வகையில் அமைந்துள்ள தாண்டிக்குளம் புகையிரக்கடவை பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதால் அச்சத்துடனே அதனூடாக பிரயாணிக்க வேண்டியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



வவுனியா தாண்டிக்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகே காணப்படும் இப்புகையிரதக் கடவையானது கடந்த காலங்களிலேயே அமைக்கப்பட்டதுடன் இதற்கான கடவை ஊழியரும் கடமையாற்றியிருந்தார். ஆனால் தற்போது இக்கடவை அகற்றப்பட்டு இங்கு ஒளி சமிக்ஞை மட்டும் பொருத்தப்பட்டுள்ளது.

வவுனியா, தாண்டிக்குளம் சந்தியானது கடந்த காலத்தில் இருந்து தற்பொழுது வரை அதிக போக்குவரத்து நெரிசல் உடைய இடமாகும். கல்மடு, ஈச்சங்குளம், புதுக்குளம் போன்ற பல கிராமங்களை சேர்ந்தவர்களும் குருமன்காடு, தாண்டிக்குளம் போன்ற நகரை அண்டிய இடங்களில் உள்ளவர்களும் ஏ9 வீதியை பயன்படுத்துகின்றனர். அத்துடன் இவ்வாறு செல்பவர்கள் இப் புகையிரத கடவையின்ஊடாகவே ஏ9 வீதியை அடைகின்றனர்.

அத்துடன் இக்கடவைக்கு மிக அண்மையில் பாடசாலை அமைந்துள்ளதுடன் இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் இக்கடவையின் ஊடாகவே செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே தாண்டிக்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகில் காணப்படும் இக்கடவைக்கு, தானியங்கி கடவை அல்லது சாதாரண கடவை யாவது போட்டு தர வேண்டும் என இலங்கை புகையிரத திணைக்களத்தினை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.(8)




## தேசியமட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ள கிளிநொச்சி, பூநகரி அறநெறிப் பாடசாலைகள்

பிரதேச, மாவட்ட மட்டத்திலான அறநெறிப்பாடசாலைகளுக்கான ஆக்கத்திறன் போட்டிகளில் பூநகரி, கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதில் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற நடனம், வில்லுப்பாட்டு போட்டிகளில் முதலிடம் பெற்று முழங்காவில் செல்வயோக சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலையும் பண்ணிசையிலே முதலிடம் பெற்ற கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையும் தெரிவாகியுள்ளன. மற்றும் பேச்சுப் போட்டி, கதா பிரசங்கப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. (8-84)

# மன்னாரை வளப்படுத்தும் நோக்கில் கையெழுத்து வேட்டை ஆரம்பம்

(மன்னார்)

"மன்னாரின் எழுச்சி அதுவே எங்களின் முயற்சி" எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்ட தமிழமுது நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில்கையெழுத்து வேட்டை ஒன்று நேற்று புதன்கிழமை காலை மன்னார் பஸார் பகுதியில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட தமிழமுது நண்பர்கள் வட்டத்தின் இயக்குநர் வை.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கையெழுத்து வேட்டையானது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

மன்னார் மாவட்டத்திற்கு வரவேற்பு கோபுரம் அமைத்தல், மணிக் கூட்டுக்கோபுரம் அமைத்தல்,மின் சமிக்ஞை விளக்குகள் பொருத்துதல், மன்னார் பொதுநூலகத்தை சிறப்பாக உருவாக்குவதோடு, கிராமப்புறங்களில் உள்ள நூலகங்களை தரமுயர்த்தல், மன்னார் மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த கையெழுத்து வேட்டையினை சர்வமதத் தலைவர்கள் இணைந்து வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத்தொடர்ந்து மக்கள்,சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு கையெழுத்திட்டுள்ளனர்.

மக்களின் கையெழுத்துக்களுடன் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்,மன்னார் நகர சபையின் செயலாளர் ஆகியோருக்கு வழங்கப் படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (3-4-8)

# தரித்து நின்ற ஹன்ரர் வாகனத்தை மோதியது ஹயஸ் வாகனம்

## இருவர் படுகாயம்



வவுனியா, மூன்று முறிப்பு, ஏ-9 வீதியில் ஹயஸ் மற்றும் ஹன்ரர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி குடும்பம் ஒன்றினை ஏற்றிச் சென்ற ஹயஸ் வாகனம் ஏ-9 வீதி மூன்று முறிப்பு பகுதியில் சுண்ணாம்பு பைக்கற்றுகளை ஏற்றி வந்த ஹன்ரர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

கொழும்பில் இருந்து சுண்ணாம்பு பைக்கற்றுக்களுடன் சென்ற ஹன்ரர் வாகனம் மூன்று முறிப்பு பகுதியில் காற்று போனமையால் அதன் பின் ரயர்களை கழற்றிக் கொண்டிருந்த போது பின்னால் வந்த ஹயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஹயஸ் வாகனத்தின் சாரதி மற்றும் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஹயஸ் வாகனத்தில் பயணித்த பெண் ஒருவரும் அவரது மூன்று பிள்ளைகளும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3-8-15-250)

# பூநகரி மத்தியஸ்த சபை இடமாற்றப்பட்டுள்ளது

பூநகரி மத்திய கல்லூரியில் தொடர்ந்து இயங்கி வந்த பூநகரி மத்தியஸ்த சபை க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெற உள்ளதை முன்னிட்டு எதிர் வரும் 06 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் மறு அறிவித்தல்வரை பூநகரி 4ம் கட்டை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும் என்பதை சகல தரப்பினருக்கும் அறியத்தருவதாக பூநகரி மத்தியஸ்தசபை தவிசாளர் யசோதரன் அறிவித்துள்ளார். (3-8-29)

# மன்னித்தலை புனித செபஸ்தியார் ஆலய முன்னாயத்த கூட்டம்

பூநகரி மன்னித்தலை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழாவை யொட்டியதான முன்னாயத்தக் கூட்டம் நேற்று முன்தினம் முதலாம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கான குடிநீர் வசதி, மலசல கூட வசதி போக்குவரத்து, மின்சாரம், சுகாதார சேவைகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியான இரண்டாவது கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பூநகரி மன்னித்தலை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர் வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-84)

# தமிழ் சான்றோர் விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும்

(பூநகரி)

பளை கோட்ட தமிழ்ச் சான்றோர் விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இவ் விழாவின் பரிசிற்குரியவர்கள் விழாவில் பங்கு கொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (8-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிப்படையால் அரசு மீது தமிழ் மக்களுக்கு எஞ்சியிருந்த நம்பிக்கையும் அற்றுப்போயுள்ளது

## மாக்சிக—லெனினிசக் கட்சி சுட்டிக்காட்டு

வடக்கில் தொடரும் வாள் வெட்டுச் சம்பவங்கள், துப்பாக்கிச்சூடுகள் உள்ளிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் கடற்படை, சிறப்பு அதிரடிப்படை என்பனவற்றைக் களமிறக்கி இருப்பதன் மூலம் அரசின் மீது தமிழ் மக்களிற்கு எஞ்சியிருந்த நம்பிக்கையும் அற்றுப்போயுள்ளது.

இந் நடவடிக்கையானது ஓரளவிற்கு அச்சமின்றியும் பதற்றமின்றியும் தமது அன்றாட அலுவல்களில் நடமாடி வந்த மக்களிற்கு பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை தெற்கின் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தி உள்ளதுடன் அரசியல் தீர்வு, நல்லெண்ணம் என்று கூறப்படுவனவற்றின் மீதான மறைமுகத் தாக்குதலாகவும் காணப்படுகிறது. எனவே மேற்படி நடவடிக்கை பேரினவாத ஒடுக்குமுறையின் தொடர்ச்சியென்றே எமது கட்சி கருதுகின்றது என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக பொதுச் செயலாளர். சி. கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் வடக்கில் வாள்வெட்டுக்கள், துப்பாக்கி சூடுகள், கஞ்சாக்கடத்தல்கள், போதைப் பொருள் பாவனைகள் மற்றும் சமூகவிரோதச் செயல்கள் எனப்படுபவை அதிகரித்துள்ளமை நிராகரிக்க முடியாதவையாகும்.

அவை தொடர்ந்து வளர்வதற்கும் உச்சமடைவதற்கும் இன்றைய அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டு சீரழிவுகளே அடிப்படைக் காரணங்களாகும். குறிப்பாகத் திறந்த கதவுப் பொருளாதாரக் கொள்கையால் இறக்குமதியாக்கப்படும் இந்திய மேற்குலக சினிமாவும் அவற்றின் மூலமான வன்முறைகளும் வக்கிரக் காட்சிகளும் இளைஞர்களால் உள்வாங்கப்படுவதும் பிரதான காரணமாகும்.

அத்துடன் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து கிடைக்கும் மிதமிஞ்சிய பணப்புழக்கமும் இளைஞர்கள் வழிதவறிச் செல்வதற்கு ஏதுவாகின்றன. அதேவேளை சட்டம் ஒழுங்கை முன்னெடுப்போர் மத்தியில் இருந்துவரும் முறையற்ற செயற்பாடுகளும், இலஞ்ச ஊழல்களும் நீதி நியாயமற்ற பக்கச்சார்பு நடவடிக்கைகளும் பிரதான காரணங்களாக அமைகின்றன.

எனவே வடக்கில் குறிப்பிட்ட சிறுதொகையினரான இளைஞர்களின் செயற்பாட்டை காரணம் காட்டி இராணுவம், கடற்படை, சிறப்பு அதிரடிப்படையினர் என்போரை வடக்கில் மக்கள் மத்தியில் நடமாடவிட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என்றே எமது கட்சி கருதுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

வவுனியாவில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அபகரித்துக்கொண்டு அப் பெண்ணின் தாயாரின் கையை வெட்டிவிட்டு இரு இளைஞர்கள் தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா. மூன்று முறிப்பு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் இரவு 10.30 மணியளவில் வீடு ஒன்றில் தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்த போது வீட்டு வாசலில் உறவினர்கள் போல் அவர்களை இளைஞர் இருவர் அழைத்துள்ளனர். அப்போது அவ்விடத்திற்கு சென்ற வீட்டில் வசித்த பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை குறித்த இளைஞர்கள் அறுத்துள்ளதுடன் பெண்ணின் கூக்குரலைக் கேட்டு ஓடிவந்த பெண்ணின் தாயாரான பரமசிவம் ஷ்கந்த லோஜினி (வயது 60) என்பவரின் கையையும் வெட்டி விட்டு இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் தங்களை இனங்காட்டி கொள்ளாத வகையில் முகத்தை மறைத்து கறுப்பு துணியால் கட்டியிருந்துள்ளனர். குறித்த சம்பவத்தின் போது காயமடைந்த பெண்ணின் தாயார் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3-8-250)

## அமைதிக்குப் பங்கம்; பெண் கைது

துன்னாலை புளியங்கியான் பகுதியிலுள்ள பொலிஸ் காவலரணை சேதமாக்கியமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்த போது அவரின் மனைவி நீதிமன்றுக்குள் சென்று அமைதிக்குப் பங்கம் விளைவித்ததால் அவரும் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். துன்னாலை பகுதியை சேர்ந்த சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றிற்கு முன்பாக வைத்து நேற்றுக் காலை பொலிஸார் கைது செய்தனர். இதனையடுத்து அவரின் மனைவி நீதிமன்றுக்குள் சென்று அமைதிக்குப் பங்கம் விளைவித்ததால் அவரும் கைது செய்யப்பட்டார். (இ-60)

## நிரந்தர நியமனம் கோரி சிங்கள ஆசிரியர்கள் கவனயீர்ப்பு



வடக்கு மாகாணப் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் சிங்கள ஆசிரியர்கள் நேற்று புதன்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் 120 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் தமக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்து வடக்கு மாகாணசபை முன்பாக நேற்று முற்பகல் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர். அதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக பிற்பகல் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு தமக்கான நியமனத்தை வழங்குமாறு கோரி மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (படங்கள்:-மகாலிங்கம்)

## சுமந்திரன் மீது கொலை முயற்சி; அவுஸ்திரேலியாவில் விசாரணை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை கொலை செய்ய திட்டமிட்ட சந்தேகநபர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள, விசேட பொலிஸ் விசாரணை குழுவொன்று அவுஸ்திரேலியா செல்லவுள்ளது.

குறித்த சந்தேகநபரை நாடுகடத்த தேவையான ஆவணங்களுடன் அந்நாட்டிற்குச் செல்லும் விசாரணைக் குழு. அந்நாட்டு அரசாங்கத்திடம் இக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளது. இக் குழுவினர் இவ்வாரம் அவுஸ்திரேலியா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமந்திரனை கொலை செய்ய திட்டமிட்டதாக சந்தேகிக்கப்படும் ஐவர், ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான நெடியவன் எனப்படும் பேரின்பநாயகம் சிவபரன் உள்ளிட்ட குழுவினரே இதற்கான திட்டத்தை தீட்டியதாக ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம், அவரை நாடு கடத்த நோர்வே அரசாங்கத்திடம் கோரியபோதும், நோர்வே அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தது. எனினும், முறையான ரீதியில் அணுகும் பட்சத்தில் விசாரணைகளுக்கு தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வழங்குவதாக நோர்வே குறிப்பிட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், அவுஸ்திரேலிய பிரஜையொருவர் இதன் பின்னணியில் செயற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ள நிலையில், அவரை நாடுகடத்தும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. (7-9)

## அம்பாறையில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு-உதுமாலெப்பை



அம்பாறை மாவட்டத்தில், என்றும் இல்லாதவாறு போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் பாடசாலை மாணவர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாகக் கூடிய அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில், ஊடகங்களுக்கு நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலுள்ள சில பிரதேசங்களில் கேரளக் கஞ்சா, ஹெரோயின்போன்றபோதைப் பொருட்கள் மொத்தமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றமையால், பாடசாலை மாணவர்களும் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக் கழகமாணவர்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகக் கூடிய சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது.

"எனவே, இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில், எதிர்கால சமூகம் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகும்.

"இப் போதைப்பொருட்களை, அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக விநியோகிப்பவர்கள் தொடர்பாக, அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டு, அவர்களைப் பாரபட்சமின்றிக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்

## இசையமைப்பாளர் சி.வரதன் அவர்களுடனான சந்திப்பு

## “இசையில் ஆர்வம் வேண்டும் இல்லையேல் அது அழிந்துவிடும்”

**பதினொரு வயதில் இசைத்துறைக்குள் பிரவேசித்த இவர் 1962 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 06 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். கலைக் குடும்பத்தில் பிறந்த இவர் பெண் குரலில் திறம்படப் பாடக் கூடியவர். இவரது தந்தையார் சிறந்த நாடகக் கலைஞராகவும் தாயார் சிறந்த பாடகியாகவும் இவரது ஒன்பது சகோதரர்களும் பாடகர்களாகவும் திகழ்கின்றனர். 1974 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பெண் குரலில் பாடிப் பலரின் பாராட்டைப் பெற்றார். சங்கீதவித்துவான் சற்குருநாதன் அவர்களிடம் இசை பயின்ற இவர் தற்பொழுது யாழ். மாவட்ட முன்னணி இசைக்குழுவில் ஒன்றான ராஜன் இசைக் குழுவின் இசையமைப்பாளராகவுள்ளார். இசையமைப்பாளர், பாடகர், தபேலா வாத்தியக் கலைஞர் எனப் பல துறைகளில் சிறந்து விளங்குகின்றார். இசையமைப்பாளர் சி. வரதன் அவர்கள் தன்னைப் பற்றியும் தன் கலைப் பணி பற்றியும் வலம்புரிக்கு தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.**

**❖ பாடல் துறைக்குள் பிரவேசம் பற்றி ?**

எனது மாமனார் வேல்நாதன் இசைக்குழுவை நடத்தி வந்தார். எனது இரு சகோதரர்களும் நானும் பாடகராக இருந்தோம். ஒருமுறை பாடசாலை விளையாட்டுப் போட்டியின் போது ஒரு பாடலைப் பாடியிருந்தேன். எல்லோரும் நன்றாக இருக்கின்றது என்று சொன்னார்கள். அந்தப் பாடலைப் கேட்ட மாமா தனது இசைக் குழுவில் என்னை ஒரு பாடகராக இணைத்துக் கொண்டார். அப்போது எனக்கு பதினொரு வயது. சுசிலா, ஜானகி ஆகியோரின் பாடலைப் பாடினேன். கேகாலையில் ஒரு பாடசாலையின் அதிபராக இருந்தவர் மகாதேவன் அவர்கள். ஒருமுறை தமது பாடசாலையில் எமது குழுவைப் பாடும் படி அழைத்தார்கள். அங்கு சென்று மூன்று தடவைகள் பாடினேன். 1974 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கே. எம். வாசன் அவர்கள் நாடகமொன்றை அரங்கேற்றினார். அதில் பாடினேன். இரண்டாம் முறையும் பாட அங்கு அழைத்தார்கள். நான் போய் மெல்லிசைப் பாடலைப் பாடினேன். அங்கு இசையமைப்பாளராக இருந்தவர் முத்துசாமி. அவர்கள் மூன்று பாடலைத் தந்து இந்தப் பாடல்களைப் பாடும் படி சொன்னார். நானும் பாடினேன். பின்னர் யாழ். மாவட்ட முன்னணி இசைக் குழுவான கண்ணன் மாஸ்ரர் அவர்களின் இசைக்குழுவிலும் 21 வயதில் பாடினேன். பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ் ஆகியோரின் பாடல்களைப் பாடி வந்தேன். இந்த இசைக்குழுவில் இரண்டு வருடங்கள் பாடினேன். பின்னர் ராங்கன் இசைக் குழுவிலும் ராஜன் இசைக் குழுவிலும் பாடி பாடல் துறைக்குள் பிரவேசித்தேன்.

**❖ இசைத்துறைக்குள் பிரவேசம் பற்றி?**

எனது மாமா சங்கீத வித்துவான் சற்குருநாதன் அவர்களிடம் ஆர்மோனியத்தைப் பயின்றேன். பின்னர் கீ போட் வாசிக்கத் தொடங்கினேன். இசையிலேயே சிறுவயதிலேயே இயல்பாகவே விருப்பம் இருந்த காரணத்தினால் மேலும் மேலும் இசையைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அதனால் இசையைப் பயின்றேன். எனக்கு ஒன்பது சகோதரர்கள். ஒன்பது பேருமே பாடகர்கள். எனது சகோதரர்கள் பாடும்போது நான் கீபோட் வாசிப்பேன். அப்படி ஒவ்வொரு சகோதரர்களும் பாடும் போது வாசித்து வாசித்து பரீட்சயம் ஆனேன். 1992 ஆம் ஆண்டு எனது சகோதரர்களுடன் இணைந்து ராகம் இசைக்குமுவை ஆரம்பித்தேன். அதில் பாடல்களையும் இசையமைப்பையும் செய்து வந்தேன். எனது சகோதரியின் மகன் கொழும்பில் தாளம் இசைக்குழு நடத்தி வருகின்றார். அங்கு சென்று இசைக்குழுவில் இசையமைப்பாளராகச் செயற்பட்டேன். கண்டி, மருதானை கொழும்பு போன்ற இடங்களில் இசைக்குழுவினை நடத்தினோம். அங்கும் நல்ல வரவேற்புக் கிடைத்தது. தற்பொழுது யாழ். ராஜன் இசைக் குழுவில் இசைய மைப்பாளராக இருந்து செயற்பட்டு வருகின்றேன்.

**❖ ராஜன் இசைக்குழு பற்றி?**

ராஜன் இசைக் குழுவின் இயக்குநர் யாழ். ரமணன் அவர்கள். இவர் ஒரு சட்டத்தரணி. இந்த இசைக்குழுவின் இசையமைப்பாளரும் கிற்றார் வாத்தியக் கலைஞரும் இவர்தான். தற்பொழுது பல வருடங்களாக இதன் இசையமைப்பாளராக இருந்து செயற்பட்டு வருகின்றேன். இலங்கையில் பல பாகங்களுக்கு சென்று இசைக்குழுவை நிகழ்த்தி வருகின்றோம். போதிய தரமான வாத்தியக் கருவிகளுடனும் சிறந்த பாடகர்கள், பாடகிகளுடன் ராஜன் இசைக்குழு செயற்பட்டு வருகின்றது. ஆலய திருவிழாக்கள் , திருமண நிகழ்வுகள் , கலை நிகழ்வுகளின் போதும் இசைக் குழுவை நிகழ்த்தி வருகின்றது. புத்தம் புதிய பாடல்கள், இடைக் காலப் பாடல்கள், பழைய பாடல்கள், தத்துவப் பாடல்கள், சிங்கள மொழிப் பாடல்கள் எனப் பல பாடல்கள் பாடப்படுகின்றன. யாழ். ரமணனின் நெறிப் படுத்தலில் ராஜன் இசைக்குழு சிறப்பாக இயங்கி வருகின்றது.

**❖ தாங்கள் பெண்குரலில் பாடுவீர்கள். அது பற்றி?**

பதினொரு வயதில் இருந்து பாட ஆரம்பித்தேன். அப் பொழுது சுசிலா, ஜானகி ஆகி யோரின் பாடல்களை விரும்பிப் பாடுவேன். பெண் குரலில் எடுத்துப் பாடுவேன். அதற்காக வீட்டில் பல தடவைகள் முயற்சி செய்து பெண் குரலில் பாடினேன். எனது பெண் குரலில் பாடிய பாடல்களைக் கேட்ட ரசிகர்களும் அன்பர்களும் நன்றாக இருக்கின்றது தொடர்ந்து பாடுங்கள் என்று உற்சாகப்படுத்தினர். எனக்குள் மேலும் மேலும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் தந்தது. அதற்காக தொடர்ந்து பல புதிய பாடல்களை பெண் குரலில் பாடி ஒத்திகை எடுத்தேன். இறுவெட்டுக்கள், ஒலி நாடாக்கள் மூலம் பாடல்களைக் கேட்டு அதன்படி ஓரளவு பாடிப் பாடி இன்று பெண் குரலில் பாடுவார் என்ற பெயரைப் பெற்றேன். இவற்றோடு பெண் குரலிலும் கதைக்கப் பழகிக் கொண்டேன்.

**❖ தாங்கள் வெளியிட்ட இறு வெட்டு பற்றி?**

2016 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை கம்பர் மலை வைரவர் கோயிலுக்கு பதினொரு பாடல்களை உள்ளடங்கிய ஒரு இறுவெட்டு வெளியிட்டோம். பதி னொரு பாடல்களுக்குரிய மெட்டுக்களையும், இசையமைப்பையும் செய்தேன். இந்தப் பாட்டிற்கான ஒலிப் பதிவை இசைவாணர் கண்ணன் மாஸ்டர் அவர்களின் மகன் முரளி அவர்கள் செய்திருந்தார். பாடல்களை எஸ்.ஜீ.சாந்தன், ரகுநாதன், எனது அண்ணன் திவாகர், ஜெயபாரதி ஆகியோர் பாடியிருந்தனர். இதில் ஒரு பாடலை நானும் பாடினேன். இந்தப் பாடல்களுக்கான இசையைக் கேட்டவர்களும், கோயில் நிர்வாகத்தினரும் இந்திய இசைமாதிரி இருக்குது, நல்லா இருக்குது, என்று பாராட்டினார்கள். இவற்றோடு பண்டத்தரிப்பு கோயிலுக்கும் இசையமைப்பைச் செய்திருந்தேன்.

**❖ இசையின் மீதான நாட்டம் மாணவர்கள் மத்தியில் எப்படியிருக்கிறது?**

மாணவர்களுக்கு இசை பயிலுவதில் ஆர்வம் இருக்கிறது. அவை சிறிது காலத்திற்குப் பின்னர் குறைவடைந்து போகிறது. இசை மீதான ஆர்வம் தொடர்ச்சியாக இருக்கும் போது தான் அதில் ஒரு அடைவு காண முடியும், பல மாணவர்கள் வெகுதூரம், சிரமம்,வறுமை எல்லாவற்றிற்கும் மேலாக இதனைப் பொருட்படுத்தாது இசையைப் பயிலு கின்றார்கள். இறுவெட்டுக்களின் வருகைக்கு முன்னர் ஒலிநாடாக்களின் மூலம் தான் பாடல்களையும், இசையையும் கேட்டோம். தற்பொழுது இணைய வசதிகளும், தொலைக்காட்சி வசதிகளும் எம் கைக்குள் வந்து விட்டன. ஒரு குருவிடம் சென்று கீபோட் பழக வேண்டும், முறைப்படி கற்க வேண்டும் என்ற ஆர்வம் மாறி இணையத்தளத்தில் அல்லது கைபேசியில் கீபோட் பழகுகின்ற முறைமை வந்து விட்டது. இவை பூரண வளர்ச்சியையோ முறையான இசைப்பயணத்தையோ ஏற்படுத்தி விடாது.

**❖ தாங்கள் இசைத்துறைக்கு மனந்திறந்து கூறுவது?**

யாழ்ப்பாண மண் இசையால் நிறைந்த மண். அதனால் அதற்கு யாழ் என்றே பெயர். மக்கள் யாவரும் இசையை நேசி க்க வேண்டும். எல்லாப் பாடல் களையும் மதிக்கின்ற மனநிலை வேண்டும. ஒரு கோயில் திரு விழாவுக்கு இசைக்குழு நிகழ்த்து வதாக இருந்தால் கோயில் நிர்வாகம் இலட்சக்கணக்கில் செலவு செய்து தான் இசைக் குழுவைப் பிடிப்பார்கள். இசைக் கலைஞர்கள் எத்தனையோ நாட்கள் கடின ஒத்திகையின் பின்னரே இசைக்கச்சேரியினை குறித்த கோயில் திருவிழாவில் நிகழ்த்துவார்கள்.

அந்த இசைக்குழுவிற்கு வருகின்ற பல இளைஞர்கள் அதன் பெறுமதி உணராது விசில் அடித்து மற்றவர்களுக்கு இடையூறாக ஆடி, குழு மோதல்களில் ஈடுபட்டு சற்று நேரம் இசை நிகழ்வையே திசை திருப்பி விடுவர். ஒரு நிகழ்வை ஆற்றுகை செய்யும் போது துறை சார்ந்தவர்கள் எவ்வளவோ முயற்சியின் மத்தியில் அதனை அரங்கேற்றும் போது இவ்வாறான சம்பவங்கள் எமது சமூகம் இன்னமும் இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை உணர்த்தி நிற்கிறது. மற்றவர்களைக் குழப்புகின்ற மனநிலை மாற வேண்டும். இசையால் லயப்படாத மனிதர்கள் எவரும் இல்லையென்று சொல்லுவார்கள். எமது வாழ்வேஓர்இசை.அந்தஇசையை நாம் கேட்டுப் பலன் பெற வேண்டும். இசையில் கூடிய பாகம் மாணவர்கள் ஆர்வம் செலுத்த வேண்டும். அவ்வாறு ஆர்வம் செலுத்தினால் இசைச் சமூகத்தை எதிர்காலத்தில் காண முடியும்.




**நேர்காணல்: ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில்



நல்லூர்க் கந்தன் மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் 5 ஆம் திருவிழா மாலை நேர வெளி வீதியுலாவின் போது.....

## தெய்வீக சிறப்பு நிகழ்வில் இன்று 'கந்தபுராணத்தில் சைவசித்தாந்தம்'

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீக சிறப்பு நிகழ்வின் ஏழாம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெறும். சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் கந்தபுராணத்தில் சைவ சித்தாந்தம் எனும் தலை ப்பில் சைவப் புலவர் சைவ நெறி மார்க்கர் ரி. குமரநாதன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு இராம கிருஷ்ண மிஷனின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 23.08.2017 புதன் கிழமை வரை தினமும் மாலை 4 மணிமுதல் இரவு 8 மணிவரையும் சிறப்பாக தேர், தீர்த்தத் திருவிழாக்களின் போது காலை 7 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் ஆலய பின் வீதியிலுள்ள மூத்ததம்பி அன்னதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## சிறார்களின் விளையாட்டு விழா

குடத்தனை முன்பள்ளிச் சிறார்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு குடத்தனை கிறிஸ்து நற்தூது பணியக வளாகத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலாளர் எஸ்.கணேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-10-19)

## கந்தபுராண எழுச்சி விழாவின் ஏழாம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமிஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் ஏழாம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் .

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாசினி மதியழகன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் கலாபூஷணம் ப.சிவானந்தசர்மாவின் (கோப்பாய் சிவம்) கந்தபுராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவு பண்ணிசை கலாவித்தகர் செல்வி சந்திரிகா கணேஷ்பரன், பண்ணிசைக் கலாவித்தகர் திருமதி கிமாலினி சுகந்தன் ஆகியோர் வழங்கும் தெய்வீக கானம் என்பன இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கில் இன்று

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஏழாம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் பாட்டு சிவரஞ்சினி ரமணா, வயலின்- எஸ்.கோபிதாஸ், மிருதங்கம்- வி.ரமணா, கடம்- கே.ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# நல்லூர் கந்தசுவாமி கோயில் அடியவர்களுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் உள்வீதியும் வெளி வீதியும் அடியவர்களின் தியான பூமியாகும். அவற்றின் அமைதியைப் பேணி பக்தர்களுக்கு உதவி புரியுங்கள்.

ஆலயமும் அதன் சூழலும் தூய்மையடையும் போது தான் அடியவர்களின் உள்ளமும் தூய்மையடைந்து இறைவன் அவரவர் உள்ளங்களில் சாந்நித்தியம் கொள்கின்றார். ஆகவே அப்புனிதமான பகுதிகளில் பாதணிகளுடன் செல்வதைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளவும்.

அருள்மிகு நல்லூர்க்கந்தனின் திருவிழாவிற்கு வருகை தரும் அடியார்கள் இலங்கைக்கான கலாசார உடையணிந்து எம் சமய சமுதாய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஆன்மீக உணர்வை மேம்படுத்த உதவிடுவீர்.

முருகப்பெருமானின்பெரும் புகழைப் பாடிப் பணிதலின்றி வேறு செயல்களை ஆலயத்திற்குள்ளும் ஆலயச் சூழலிலும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

வெண்மணல் பரப்பிய வீதியிலே அடியவர்கள் அங்கப்பிரதட்சணம், அடியழித்தல் செய்வதனால் கழிவுப் பொருட்களை குப்பைத் தொட்டியிலிட்டு வீதியை சுத்தமாக வைத்திருக்க உதவிடுவீர்.

யாழ். மக்களை மட்டுமின்றி உலகம் வாழ்மக்கள் அனைவரையும் தன் அருட் கண்பார்வையினால் இரட்சித்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமானை அடியார்கள் இறைசிந்தனையுடன்மனதை ஒருநிலைப்படுத்தி வணங்குவதற்கு ஏதுவாக ஆலயச் சூழலில் உணவகங்கள். ஒலி பெருக்கிகள் உணவு தயாரிக்கும் போது ஏற்படும் ஒலிகள் என்பவற்றைக் கட்டுப் படுத்தி அமைதியைக் காத்திடுவீர்.

ஆலய வெளிவீதிகளில் புனிதம் பேணும் பொருட்டு விளம்பரப் பதாதைகள் அமைப்பதையும் அலங்கார விளக்குகள் அமைத்துக் காட்சிப்படுத்துவதையும் தவிர்த்திடுவீர்.

ஆலயச் சூழலில் மாமிச உணவு, மதுபானம் புகைப் பிடித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

தேர், தீர்த்தம் ஆகிய திருவிழா நாட்களில் தூக்குக் காவடி நேர்த்திக்கடன் செய்வோர் சுவாமி இருப்பிடத்திற்குச் சென்று பின்னர் வீதித் தடையினூடாகச் செல்ல முடியும். ஆதலால் தூக்குக் காவடி நேர்த்திக்கடன் செய்யும் அடியார்கள் நேரத்தைக் கவனத்திற்கொண்டு அதனால் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஆண்டவன் முன் அனைவரும் சமம். அலங்காரக் கந்தனின் அருள் அகிலமெங்கும் பரவி சிறப்புற வேண்டுமென இறைவனை வணங்குவோமாக என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ




## நல்லூர் ஆளும் நாயகனே



வெற்றி வடிவேலனே
சக்தி உமை பாலனே
நற்றுணையாய் நீயிருக்க
உனை நம்பி நாமிருக்க

முருகா வென்று தினம்
உன் நாமம் கூறி
உருகு வோர் உள்ளத்தே
வீற்றிருந்தருள் தருவாய்

கருணை கொண்டு துயர் தீர்க்கும்
கந்தனே கலியுக வரதனே
நல்லூர் ஆளும்
நாயகனே கடம்பனே
முத்தமிழ் முருகனே
உன் திருநாமம் போற்றி போற்றி

சுழிபுரத்தூர்
க.சிவகுமார்.

## தங்கவேல் முருகனையே பாடு

பல்லவி

நீலநிற மயிலுனக்கு நாற்றிசையும் சுற்றிவர
நீறணியும் பக்தருக்கு நின்னருளே கற்றறிய

அனுபல்லவி

காலமெலாம் கந்தாவுனை கரம் கூப்பி தொழுகின்றோம்
கரம்தாங்கும் வேலழகு கண்களுக்கு பேரழகு
-நீலநிற

சரணம்

ஆறுபடை வீடமர்ந்து ஆறுதலும் தாமுருக
உன் கரத்து வேலாலே ஊறுவினை தீருமையா
கூறுமடியார் குறையை கணமெலாம் கேளுமையா
காற்றினிலே நாமங்கள் கீர்த்தனையாய் ஒலிக்குதையா
-நீலநிற

கலைமாமணி
கே.ஆந்திருத்துவராஜா.

## முருகனையே பாடிப் பணிந்தோம்

நல்லை முருகனை நாம் ஒருமுறை நினைப்போம்
முத்தியை அவன் தந்திடுவான்
தொல்லை என்று அவனை மனதார துதிப்போம்
தொல்லைகளை தொலைதூரம் விரட்டிடுவான்
தொழும் பக்தர்கள் மீது பொழிகிறான் அருள் மழை

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## நல்லைக்கந்த சந்தப் "பா"



பொருளில் வாழ்பவர் புவியை யாள்பவர்
பொருந்தி யேபல புகழில் வீழ்பவர்
இருந்தி டும்நிலை யறியு மின்மையால்
இன்னல் செய்வதி லின்பங் கொள்பவர்
பொருந்தி யேயவர் வருந்தி மீண்டிடப்
பொறுத் திருந்துநீ புரிய நைபவன்
தெரிந்து முன்னடி யார்கள் வாழவே
தெளிவை நல்குவாய் நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிரை கொடுக்கவும் தயார் - ஆனால் மாநிலத்தை பிரிக்க துணை போகமாட்டேன்

## மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா

(டில்லி)

என் உயிரை கொடுக்கவும் தயார். ஆனால் மாநிலத்தை பிரிக்க ஒருபோதும் துணை போகமாட்டேன் என்று மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.



மேற்கு வங்காளத்தில் டார்ஜிலிங் உள்ளிட்ட பகுதிகளைப் பிரித்து கூர்காலாந்து என்ற பெயரில் தனி மாநிலம் அமைக்கக்கோரி கூர்கா ஜனமுக்தி மோர்ச்சா (ஜி.ஜே.எம்) கடந்த 48 நாட்களாக காலவரையறையற்ற தொடர் போராட்டம் நடத்தி வருகிறது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் என்னுயிரைக் கொடுக்கவும் தயார். ஆனால் மாநிலம் பிரிவதற்கு துணை போகமாட்டேன் என்று அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

இதுகுறித்து மம்தா பானர்ஜி தெரிவிக்கையில் "என்ன நடந்தாலும், அனைவரும் நினைவில் கொள்வது என்னவெனில், நான் எனது உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறேன். ஆனால், மாநிலம் பிரிவதற்கு ஒருபோதும் துணையாக இருக்கமாட்டேன். ஒவ்வொரு மாவட்டமும் எங்களுடைய சொத்து. ஒவ்வொரு மதத்தினரும், ஜாதியினரும் இங்கே இருப்பார்கள்.

இது இந்தியா. அதை பாதுகாப்பது நமது கடமை. அதை பிரிக்க முடியாது. மேற்கு வங்காளத்தின் அனைத்து மாவட்டங்களையும் விரும்புவதுபோல், டார்ஜிலிங்கையும் நான் விரும்புகிறேன். மேற்கு வங்காளத்தின் ஒரு பகுதிதான் டார்ஜிலிங் என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். வருங்காலத்திலும் அப்படித்தான் இருக்கும்.

டார்ஜிலிங் பகுதி மீண்டும் பழைய நிலைக்கு திரும்ப விரும்புகிறேன். தேயிலை தோட்டம் வேலை மீண்டும் தொடங்க வேண்டும். டார்ஜிலிங் தேயிலை உலகத்தரம் வாய்ந்த பிராண்ட். அதை கெடுத்துவிடக்கூடாது" என்றார். (3-8)

## தமிழக விவசாயிகளுடன் கனிமொழி எம்.பி.சந்திப்பு




டில்லி ஜந்தர்மந்தரில் 18ஆவது நாளாக தமிழக விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கனிமொழி எம்.பி. கலந்து கொண்டு தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்தார்.

கடந்த 17 நாட்களாக பாடை கட்டி போராட்டம், கை, கால்களை சங்கிலியால் பிணைத்து போராட்டம், பட்டை நாமம் போட்டு போராட்டம் ஆகியவற்றை நடத்தி வந்த விவசாயிகள் 18ஆவது நாளாக நேற்றும் ஜந்தர்மந்தரில் நடைபெற்ற போராட்டத்தில் மத்திய, மாநில அரசுகளாலும், வரட்சியாலும் விவசாயிகள் மரணம் அடைவதாக கூறி கழுத்தில் அட்டைகளை தொங்க விட்டபடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கனிமொழி எம்.பி. கலந்து கொண்டு தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். அப்போது பிரதமர் நரேந்திர மோடி விவசாயிகளை சந்தித்து பேசி அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். கனிமொழி எம்.பியுடன் டி.கே. எஸ். இளங்கோவன், ஆர்.எஸ். பாரதி ஆகியோரும் சென்றனர். (3-8)

### பாரதச் செய்தி

## கூடங்குளம் அணுமின்நிலையம் தொடர்பாக இந்தியா, ரஷ்யா 3ஒப்பந்தங்கள் கையெழுத்து



கூடங்குளம் அணுமின் நிலைய வளாகத்தில் 5 மற்றும் 6ஆவது அணு உலைகளை ரஷ்யா உதவியுடன் கட்ட இந்தியா, ரஷ்யா இடையே 3 ஒப்பந்தங்கள் டில்லியில் கையெழுத்தாகின.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஜூன் மாதம் முதல் வாரம் ரஷ்யா சென்றிருந்தார். அப்போது அவர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.


தமிழ்நாட்டில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலைய வளாகத்தில் 5 மற்றும் 6 ஆவது அணு உலைகளை ரஷ்யா உதவியுடன் கட்டுவது என்று அப்போது ஒப்பந்தம் போடப்பட்டது. பல தடைகளை கடந்து இந்த ஒப்பந்தம் போடப்பட்டது.

இந்த அணு உலைகளுக்கான 3 ஒப்பந்தங்கள், கடந்த திங்கள் டில்லியில் கையெழுத்தானது.

இதுபற்றி ரஷ்யாவின் ஜே.எஸ்.சி. ஆட்டம்ஸ்டிராய் எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் துணைத்தலைவர் ஆன்ட்ரே லெபேதெவ் கூறும்போது, "கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 5ஆவது மற்றும் 6 ஆவது அணு உலையின் கட்டுமான திட்ட நடைமுறை வடிவமைப்பு தொடங்கியுள்ளது.

3ஆவது கட்டப்பணிகளை நிறைவு செய்வதற்கான ரஷ்ய சாதனங்கள் கொள்முதல் நடைமுறைகளும் தொடங்கி உள்ளன" என்று குறிப்பிட்டார். (8)

## தரம்புரண்டது புகையிரதத்தின் 14 பெட்டிகள்



(பாட்னா)

பீகார் மாநிலத்தின் கைமூர் பகுதியில் சரக்கு புகையிரத்தின் 14 பெட்டிகள் தடம் புரண்டது. இதனால் அந்த பகுதியில் புகையிரத போக்குவரத்து பாதிப்பு அடைந்துள்ளது.

பீகார் மாநிலத்தில் உள்ள கைமூர் பகுதி வழியாக கயா - மொகல்சராய் பகுதிகளுக்கு இடையே சரக்கு புகையிரம் ஒன்று நேற்றுக் காலை சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென புகையிரதத்தின் 14 பெட்டிகள் தடம் புரண்டன. இதனால் தண்டவாளத்தில் இருந்து சரக்கு புகையிரத பெட்டிகள் கவிழ்ந்து விழுந்தன.

விபத்து குறித்து தகவலறிந்ததும் புகையிரத அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். தண்டவாளத்தில் சிதறிக் கிடக்கும் புகையிர பெட்டிகளை மீட்கும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டனர்.

மேலும், சேதமாகி கிடக்கும் தண்டவாளங்களை சீரமைக்கும் பணியிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விபத்தால் அவ்வழியாக செல்லும் புகையிரத போக்குவரத்து பாதிப்பு அடைந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3-8)

## அமைச்சர் வீட்டில் ரூ.5கோடி சிக்கியது



டில்லியில் வருமான வரித்துறையினர் நேற்று நடத்திய அதிரடிச் சோதனையில் கர்நாடக மாநில எரிசக்தி துறை அமைச்சர் சிவகுமார் வீட்டில் இருந்து 5 கோடி ரூபாய் கைப்பற்றப்பட்டது.

நேற்றுக் காலை 7 மணியளவில் வருமான வரித்துறை அதிகாரிகள் அமைச்சர் சிவகுமாருக்கு சொந்தமான கனகபுரா மற்றும் சதாசிவநகர் பகுதிகளில் உள்ள வீடுகள் உட்பட 39 இடங்களில் சோதனை நடத்தினர். ஏற்கனவே, வரி ஏய்ப்பு தொடர்பான வழக்கின் தொடர்ச்சியாக இச் சோதனை நடத்தப்படுவதாக தெரியவந்துள்ளது.

மேலும், குஜராத் எம்.எல்.ஏ.க்கள் தங்க வைக்கப்பட்டுள்ள அவருக்கு சொந்தமான சொகுசு விடுதியிலும் திடீரென புகுந்து அதிரடியாக சோதனை செய்து வருகின்றனர். இதனால் பெங்களூரில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதேபோல், டில்லியில் உள்ள கர்நாடக அமைச்சர் சிவகுமாரின் வீட்டிலும் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். இச்சோதனையில் 5 கோடி ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து அங்கு சோதனை நடைபெற்று வருகிறது. (3-8)

# குஜராத்தில் தொடரும் சோகம்

## மழைக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 234ஆக உயர்வு

(அகமதாபாத்)

குஜராத் மாநிலத்தில் மழைக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 234 ஆக உயர்ந்துள்ளது. இதேபோல் இமாச்சலபிரதேசமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.



தென்மேற்கு பருவ மழை காரணமாக வட மாநிலங்கள் பலவற்றிலும் தொடர்ந்து பலத்த மழை கொட்டி வருகிறது. இதில் குஜராத் மாநிலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பருவ மழை தொடங்கி சில நாட்களிலேயே அங்கு 70 சதவீதம் மழை பெய்துள்ளது.

அங்குள்ள 203 அணைகளில் 38 அணைகள் நிரம்பி வெள்ளம் வழிந்தோடுகிறது. 15 அணைகளில் 90.5 சதவீதத்துக்கும் மேல் நிரம்பி உள்ளது.

தொடர்ந்து பலத்த மழை பெய்வதால் பெரும்பாலான பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தில் சிக்கியும், அது தொடர்பான விபத்துகளில் சிக்கியும் மாநிலம் முழுவதும் இதுவரை 224 பேர் பலியாகி உள்ளனர். அங்குள்ள பன்சகந்தா மாவட்டம் தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. அங்கு மட்டும் 61 பேர் உயிரிழந்துள்ளனர்.

குஜராத்தில் மீட்பு பணிகள் மற்றும் மழை நிவாரண பணிகள் போர்க்கால அடிப்படையில் நடந்து வருகின்றன.

இதேபோல் இமாச்சல பிரதேசத்திலும் தற்போது கடுமையாக மழை பெய்து வருகிறது. இதனால் அந்த மாநிலமும் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது. குறிப்பாக இமய மலை பகுதி முழுவதும் மழை பெய்கிறது. இதனால் ஆங்காங்கே நிலச்சரிவு ஏற்பட்டு இருக்கிறது.

இந்தியா- திபெத் வீதியில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவால் அந்த வீதி முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. ஏராளமான வாகனங்கள் எந்த பக்கமும் செல்ல முடியாமல் வீதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

ஜொகிந்தர் நகர் என்ற இடத்தில் நிலச்சரிவில் கட்டடம் இடிந்து ஒருவர் உயிர் இழந்தார். பவாநகர் என்ற இடத்தில் 2 மாடி கட்டடம் இடிந்து ஒருவர் பலியானார்.

மேலும் கிராமங்களில் நடந்த நிலச்சரிவில் 2 பேர் பலியானார்கள். இதன் மூலம் இமாச்சல பிரதேசத்தில் நிலச்சரிவில் சிக்கி 4 பேர் பலியாகி இருக்கிறார்கள். அங்கும் மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

மேற்கு வங்காளத்தில் மழைக்கு இதுவரை 46 பேர் பலியாகி உள்ளனர். தற்போது மழை குறைந்திருந்தாலும் வெள்ளப் பாதிப்பு நிலைமை மோசமாகவே இருக்கிறது. 14 மாவட்டங்களில் 27 இலட்சம் பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 311 இடங்களில் அரசு முகாம்கள் அமைத்துள்ளது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருடனும் மோத சீனா தயார்



## ஜனாதிபதி ஜி ஜின்பிங் பரபரப்பு பேச்சு

(பீஜிங்)

சீனாவின் எந்த ஒருபகுதியையும் ஆக்கிரமிக்க அனுமதிக்க முடியாது. அதற்காக யாருடனும் மோத தயார் என்று சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் பேசியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் விடுதலை இராணுவம் உருவாக்கப்பட்ட 90ஆவது ஆண்டு விழாவில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பங்கேற்று பேசிய போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

சிக்கிம் எல்லை தாண்டி டோக்லாமில் ஆக்கிர மித்துள்ள இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பேசிய அவர், ஆக்கிரமிப்பு அல்லது நாட்டை விரிவாக்கம் செய்யும் நடவடிக்கையை சீனா ஒருபோதும் விரும்பியது இல்லை. அதே சமயம் நமது எல்லைகளை யாராவது தொட விரும்பி னால் அதை நாம் அனுமதிப்பதும் இல்லை. நாட்டின் இறையாண்மையை பாது காக்கவும், அண்டை நாடுகளுடனான எல்லை பிரச்சினையை தீர்க்கவும் நமது இராணுவ பலம் பயன்படுத் தப்படும். எனவே சீன இரா ணுவம் எப்போதும் போருக்கு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

மிகப்பெரிய போரை எதிர் கொள்ள தயார் செய்ய வேண்டும். ஏனெனில் சக்திவாய்ந்த படைகள் எப்போதும் போருக்கு தயாராக இருப்பதோடு மட்டுமல்ல வெற்றியை உறுதி செய்யவும் தயாராக இருக்கும். போரை தடுக்க அமைதி பேச்சுவார்த்தை, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் உள்ளன. ஆனால் அனைத்திற்கும் இறுதி உத்தரவாதத்தை இராணுவம் வழங்க வேண்டும்.

சீனாவின் எந்த ஒரு பகுதியையும் எந்த பகுதி மக்களும், அமைப்பும், அல்லது அரசியல் அமைப்பும் பிரிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் எந்த நேரத்திலும், எந்த வடிவத்திலும் நாட்டில் இருந்து வெளியேற்றப்படுவார்கள். சீன மக்கள் அமைதியை விரும்புவார்கள். ஆக்கிரமிப்பு அல்லது விரிவாக்கத்தை நாம் ஒருபோதும் விரும்ப மாட்டோம். ஆனால் நமது நாட்டின் மீதான அனைத்து ஆக்கிரமிப்புகளும் தோற்கடிக்கப்படும். எனவே ஆற்றலுள்ள, தைரியமுள்ள, துணிச்சலான, நல்லொழுக்கம் உள்ள இராணுவத்திற்காக தன்னை அர்ப்பணிக்கக்கூடிய புதிய படையை உருவாக்க வேண்டும். ஏனெனில் போர் திறன் தான் ராணுவ அதிகாரிகளுக்கு முக்கியம்.

எனவே எந்த ஒரு நிகழ்வுக்கும் சீன இராணுவம் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் இராணுவத்தை ஒருங்கமைத்து முன்னேறிச்சென்று எந்த நேரத்திலும் வெற்றி அடைய முடி யும். அதற்கு ஏற்றாற்போல் இராணுவ போர்ப்பயிற்சிகளை சர்வதேச தரத்திற்கு மாற்ற வேண்டும் என்று தெரிவித்தார். (3-8)

# பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்து தப்பிக்க முயன்ற கைதிகள் சுட்டுக்கொலை

ரஷ்யாவில் பொலிஸாரின் துப்பாக்கியை பறித்துக் கொண்டு தப்பிக்க முயன்ற மூன்று கைதிகள் நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொலை மற்றும் கொள்ளை வழக்கில் தொடர்புடைய ஐந்து கைதிகளை ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள பிராந்திய நீதிமன்றில் ஆஜர்படுத்து வதற்காக கொண்டு சென்றனர். கைதிகளுக்கு பாதுகாப்பாக துப்பாக்கியுடன் இரண்டு பொலிஸார் சென்றனர்.

நீதிமன்றில் உள்ள லிப்ட் மூலம் மாடிக்குச் சென்றனர். லிப்ட் 3 ஆவது மாடியில் நின்றபோது, பொலிஸாரின் துப்பாக்கியை பறித்துக் கொண்டு கைதிகள் தப்பிக்க முயன்றனர். அப்போது தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கியால் சுட்டதில் மூன்று கைதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்ற இருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த ஐந்து பேரும் கார் உரிமையாளர்களை கொலை செய்து காரை திருடுதல் மற்றும் 17 கொலை வழக்குகளில் தொடர்புடையவர்கள் என விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. (3-8)




# காற்று, மின்சாரத்தில் உணவு தயாரிப்பு
## விஞ்ஞானிகள் சாதனை

சர்வதேச அளவில் உணவு தட்டுப்பாடு அபாயம் உள்ள நிலையில் காற்று மற்றும் மின்சாரம் மூலம் உணவு பொருள் தயாரித்து விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ள்னர்.

சர்வதேச அளவில் உணவு தட்டுப்பாடு அபுாயம் உள்ள நிலையில் காற்று மற்றும் மின்சாரம் மூலம் உணவு பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. பின்லாந்தில் உள்ள வி.டி.டி. தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம்லீரணந்தாதொழில்நுட்ப பல்கலைக் கழக விஞ்ஞானிகள் இணைந்து இச்சாதனை புரிந்துள்ளனர்.

காற்றில் இருந்து காபனீரொட்சைட்டை பிரித்து எடுத்து அதிலிருந்து புரோடீன் பவுடர் தயாரித்துள்ளனர். அதை மனிதர்கள் மற்றும் விலங்குகள் உணவு பொருளாக பயன்படுத்த முடியும் என தெரிவித்துள்ளனர்.

இந்த புரோட்டீன் பவுடரை மின்சாரத்துடன் சேர்த்து எங்கு பயன்படுத்தினாலும் அது உணவுப் பொருளாக மாறும். மேலும் இதை நிலத்தில் பயன்படுத்துவதன் மூலம் பயிர்கள் செழித்து வளரும். அதிக அளவு மகசூலை கொடுத்து உணவு பொருள் உற்பத்தி பெருகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காபனீரொட்சைட் மற்றும் மின்சாரத்துடன் சேர்த்து தயாரிக்கப்படும் புரோட்டீன் பவுடர் 10 மடங்கு அதிக ஒளிச்சேர்க்கையை ஏற்படுத்தி காய்கள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட உணவு பயிர்களின் மகசூலை அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (3-8)

# ஆப்கானிஸ்தான் மசூதியில் தீவிரவாதிகள் தாக்குதல்

## 20 பேர் பலி; 30 பேர் காயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தான் மசூதியில் தீவிரவாதிகள் நடத்திய பயங்கர தாக்குதலில் 20 பேர் பலியாகினர். 30 பேர் படுகாயமடைந்தனர். ஆப்கானிஸ்தானில், ஈரான் நாட்டு எல்லையை ஒட்டி அமைந்துள்ள ஹீரத் நகரில் ஷியா பிரிவு முஸ்லிம்களின் ஜவாத்யா மசூதி அமைந் துள்ளது. இங்கு நேற்று முன்தினம் இரவு 2 தீவிரவாதிகள் பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்தனர். தீவிரவாதி ஒருவன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். மற்றொருவன், துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டான். இதில், மசூதியில் இருந்த 20 பேர் பலியாகினர். 30 பேர் படுகாயமடைந்தனர்.

உடனடியாக பாதுகாப்பு படையினர் விரைந்து வந்து, தீவிரவாதிகளை சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவத்திற்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. கடந்த திங்கட்கிழமை தலைநகர் காபூலில் ஈராக் தூதரகத்தின் அருகே ஐ.எஸ்.தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய நிலையில், தற்போது மசூதியில் குண்டுவெடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# அமெரிக்காவில் சீன முதலீட்டை தடை செய்ய வேண்டும்-சக் சூமர்



அணுஆயுத சோதனைகளை நிறுத்த வடகொரியா விற்கு சீன அரசு அழுத்தம் கொடுப்பதற்காக அமெரிக்காவில் சீனா செய்துவரும் முதலீடுகளை தடை செய்ய வேண்டும் என அமெரிக்க செனட் சபை உறுப்பினர்கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க செனட் சபை உறுப்பினரும் ஜனநாயக கட்சியை சேர்ந்தவருமான சக் சூமர் ஜனாதிபதி ட்ரம்பிற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் வடகொரியா பிரச்சினையில் சீனா நடவடிக்கை எடுக்க அந்நாட்டின் மீது கூடுதல் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதற்காக அமெரிக்காவில் சீனா செய்து வரும் முதலீடுகளுக்கு உடனடியாக தடை விதிக்கவேண்டும் என கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக அமெரிக்காவின் வெளிநாட்டு முதலீட்டு கமிட்டி மூலம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (3-8)

## சவுதியில் பாரிய சுற்றுலாத் திட்டம்

சவுதி அரேபியாவின் பொருளாதாரத்தை பரவலாக்கும் ஒரு முயற்சியாக, பாரிய சுற்றுலா அபிவிருத்தி திட்டமொன்றை சவுதி அறிமுகப்படுத்தியுள்ளது.

அத்திட்டத்தின்படி 50 தீவுகள் மற்றும் செங்கடலிலுள்ள பிற தளங்கள் என்பவற்றை ஆடம்பர ஓய்வு விடுதிகளாக மாற்ற எதிர்பார்த்துள்ளது. சவுதியில் எண்ணெய் விலை வீழ்ச்சியை அடுத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் உள்நாட்டு பார்வையாளர்கள் ஆகியோரை கவரும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சவுதி அரேபியாவில் மது, சினிமா மற்றும் திரையரங்குகள் என்பவை தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# சீனப் பெருஞ்சுவருக்கு அடியில் அதிவேக புகையிரத சுரங்கப்பாதை

(பீஜிங்)

சீனாவில் அதிவேக புகையிரத சேவைக்கான புகையிரத பாதையின் ஒரு பகுதி, சீனப்பெருஞ்சுவருக்கு அடியில் 12 கி.மீ. நீளத்திற்கு அமைய உள்ளது. இந்த சுரங்கப் பாதையால் பெருங்சுவருக்கு பாதிப்பு ஏற்படும் அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

சீனாவில் பீஜிங் மற்றும் ஷாங்ஜியாகோ நகரங்களை இணைக்கும் வகையில் 174 கி.மீ. நீளத்திற்கு அதிவேக புகையிரதப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியானது, புகழ்பெற்ற சீனப் பெருஞ்சுவருக்கு அடியில் 12 கி.மீ. நீளத்திற்கு சுரங்க புகையிரதப் பாதையாக அமைய உள்ளது. இதற்கான கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2019இல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

படாலிங் பகுதியில் பெருஞ்சுவருக்கு அடியில் இந்த சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது. இதில், படாலிங் பெருஞ்சுவர் மேற்பரப்பில் இருந்து 102 மீற்றர் ஆழத்தில் மிகப்பெரிய மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட புகையிரத நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதுபோன்று அதிக ஆழமான இடத்தில் புகையிரத நிலையம் கட்டப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

ஆனால் சீனப் பெருஞ்சுவர் அருகில் சுரங்கப் பாதை அமைக்கப்படுவதால் அதற்கு பாதிப்பு ஏற்படும் என மக்கள் மிகுந்த கவலையில் உள்ளனர்.



இந்த புகையிரத பாதையுடன் இணையும் ஷாங்ஜியாகோ நகரில் 2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயால் பலியானோர் எண்ணிக்கை 327 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

டெங்கு நோய் காரணமாக இந்த ஆண்டில் பலியானவர்களின் எண்ணிக்கை 327 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த ஆண்டின் கடந்த ஜுலை மாதம் வரையான காலப் பகுதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 605 ஆக அதிகரித்துள்ளது.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 30 வீதமானோர் 5 முதல் 19 வயது வரையான மாணவர்கள் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு குறித்து தன்னிடம் பதிலில்லை என்கிறார் சீனத் தூதுவர்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனம் குத்தகைக்கு பெற்றுக் கொண்டமை தொடர்பாக தம்மிடம் பதிலில்லை என இலங்கைக்கான சீனத் தூதுவர் யி சியா லியாங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சீன நிறுவனமான சீன மேர்சன்ட் ஃபோர்ட் ஹோல்டிங் நிறுவனத்துக்கும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் இடையிலான வர்த்தக தொடர்பே இது வாகும் என சீனத் தூதுவர் தெரிவித்தார்.

ஏற்கனவே சீன நிறுவனம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணத்துக்காக 1.5 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது.

இந்த நிலையில் ஏன் சீன நிறுவனம் மேலதிகமாக 600 மில்லியன் டொலர்களை செலவிடவுள்ளது என்று பலரும் கேட்கின்றனர்.

எனினும், இதற்கு தம்மிடம் பதிலில்லை. இது ஒரு வர்த்தக விடயம் என்றும் சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, சீனாவுக்கு மீளசெலுத்த வேண்டிய கடன் தவணைக் கட்டணங்களை இலங்கை உரிய முறையில் செலுத்தி வருகிறது. எனவே, இலங்கைக்கு சீனா தொடர்ந்தும் உதவும் என்றும் சீனத் தூதுவர் தெரிவித்தார். (இ-7)

# ஜாதிக பலசேனா அமைப்பின் செயலர் வட்டரக தேரர் கைது



(கொழும்பு)

ஜாதிக பல சேனா அமைப்பின் செயலாளர் வட்டரக விஜித தேரர் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால், அதன் பணியாளர்களுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் கலகம் விளைவிக்கும் வகையில் செயற்படுதல் போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், உடல் நலக் குறைவு காரணமாக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மகிந்த அரசாங்க காலத்தில் பொதுபல சேனா அமைப்பினால், கடுமையாக நிந்திக்கப்பட்டு, தாக்கப்பட்ட வட்டரக தேரரே இவ்வாறு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மின்சாரத்தைத் துண்டிக்கும் திட்டமில்லை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உறுதி

(கொழும்பு)

மின்சாரத்தை துண்டிக்கும் திட்டமில்லை என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். நாட்டில் கடுமையான வரட்சி நிலவிய போதிலும் மின்சாரத்தை துண்டிக்க தீர்மானிக்கவில்லை எனவும், தடையின்றி மின்சாரம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மின் தடையை அமுல்படுத்தவோ அல்லது கட்டணத்தை உயர்த்தவோ அரசாங்கம் தீர்மானிக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 300 மெகாவோட் உற்பத்தி செய்யும் ஓர் பிரிவு இயங்கவில்லை எனவும், நீர் மின் உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் மின்சாரம் தொடர்ச்சியாக வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)



# மாட்டுடன் மோ.சைக்கிள் மோதியதில் இளைஞனும் மாடும் உயிரிழப்பு!

மட்டக்களப்பு-கொழும்பு வீதியில் பிள்ளையாரடி பகுதியில் மோட்டார்சைக்கிள் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரும் மாடும் உயிரிழந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளை ஓட்டிச் சென்ற கிரான் கும்புறுமூலை வெம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய சிறிகரன் நிசாந்தன் என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பார்வைகளில் ஆரோக்கியம்!

ஒரு திருமண வீட்டிற்குள் நுழைவதற்காகத் தெருவில் வாகனத்தை நிறுத்திப் பூட்டி விட்டு மண்டபத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். திருமணம் முடிந்து விட்டதால் திரும்பிக் கொண்டிருந்த கும்பல் ஒன்று என்னைக் கடந்து சென்றது. அவர்களின் உரையாடல், திருமண வீட்டில் காணப்பட்ட குறைகளைக் சுற்றியதாகவே இருந்தது.

இவர்கள் மட்டுமல்ல, பெரும்பாலானவர்கள் இப்படிப்பட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். மற்றவர்களின் ஒவ்வொரு செயலிலும் என்ன குறை கண்டு பிடிக்கலாம் என்றே அலைகிறார்கள்.

காமாலைக் கண்ணிற்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்கிற கதையாய் இவர்கள் பார்வைக்கு அத்தனையும் தவறுகளாகத் தெரிகின்றன.

இது சொத்தை, அது சொள்ளை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதை நாம் உடனடியாக கைவிட்டு விட்டு நம்முடைய பார்வைகளை ஆரோக்கியமுடையவையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

நாம் ஒரே நாளில் மாறிவிட முடியாது. எனவே முதற்கட்டமாக மனிதர்கள் அனைவரும் குறைபாடு உடையவர்களே. எனவே நாம் இதைப் பெரிதுபடுத்தி எண்ணக்கூடாது என்கிற கோணத்தில் நிறையச் சிந்திக்க வேண்டும். இரண்டாவதாக இதெல்லாம் (தவறுகள்) எங்கும் சகஜம் என்று எதையும் ஏற்றுக் கொள்கிற மனோபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதை விடுத்து சும்மா ஓட்டை உடைசல் களையே பெரிதுபடுத்திப் பேசிக் கொண்டிருந்தால் ஒரு முக்கியமான பிரச்சினையை சந்திக்க வேண்டிவரும். அதாவது நம்முடைய குறைகள் மற்றவர்களால் பெரிதுபடுத்திப் பார்க்கப்படும்.

மேலும் நம்முடைய மோசமான விமர்சனங்கள் மற்றவர்களின் காதுகளை எட்டும் போது அவர்களும் பதிலுக்கு சும்மா இருக்க மாட்டார்கள். சொல்லால் விஷப் பிரசாரம் செய்வார்கள். செயலால் நமக்கு எதிராகத் திரும்பி விடுவார்கள். இவை நம் வளர்ச்சியையும் நற்பெயரையும் பாதிக்கும்.

நம் பார்வையில் ஆரோக்கியம் வந்துவிட்டால் பெருந்தன்மைகளை வளர்த்துக் கொண்டு விட்டால், நாம் எதிர்நோக்க வேண்டிய பிரச்சினைகளும் குறைந்து வருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச செயலகம் நேற்று சமுர்த்திப் பயனாளிகளால் முற்றுகை









(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலகத்திற்கு முன்பு சமுர்த்திப் பயனாளிகள் நேற்றுக் காலை முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு பிரதேச செயலகத்தை இயங்க விடாது கதவினையும் பூட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பிரதேச செயலரையும் செயலகத்திற்கும் செல்லவிடாதவாறு போராட்டக்காரர்கள் தடுத்திருந்த நிலையில் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவ்விடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர் களுடன் கலந்துரையாடி பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பயனாளிகளுடன் ஒரு கலந்துரையா டலையும் ஏற்பாடு செய்திருந்தார். இதே வேளை துறைசார் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்று தருவதாக அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உறுதியளித்ததையடுத்து சமுர்த்திப் பயனாளிகளின் போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த 10 வருடங்களாக சமுர்த்தி நிவாரணம் பெற்று வந்த காரைநகர் பகுதி மக்கள் காரைநகர் பிரதேச செயலகத்தில் மூன்று மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற சமுர்த்திப் பயனாளிகள் மீளாய்வின் போது தாம் புறக்கணிக்கப்பட்டதாகவும் தமக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்து காரைநகர் பிரதேச செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## வண்ணக் கோலங்கள் கலை நிகழ்வு இன்று

திருமறைக் கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் இணைந்து வழங்கும் "வண்ணக் கோலங்கள்' என்னும் கலைநிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளன. உடுவில் ஆர்க் இல் உள்ள மாற்றாற்றல் உடைய பிள்ளைகள் வழங்கும் பல்வேறு கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கணக்காளர் ஆர்.சந்திரதாஸ், சிறப்பு விருந்தினராக பாசையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக்கலாமன்றமும்சுனேரா நிறுவனமும் அழைப்பு விடுத்துள்ளன. (இ-3)

## பல இடங்களில் கொள்ளையிட்டவர் சிக்கினார்

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கொகுவல பகுதியில் வைத்து நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார். மிரிஹான விஷேட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேகநபரால் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் இருந்து சுமார் 15 இலட்சம் ரூபா வரையான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. (இ-7)

## மகாராஷ்டிரா பாட நூலிலிருந்து இலங்கை தொடர்பான கொள்கையில் ராஜீவ்காந்தியின் தோல்வி நீக்கப்படும்



மகாராஷ்டிர மாநில பாட நூல்களில் இடம்பெற்றிருந்த, இலங்கை தொடர்பான கொள்கையில் ராஜீவ் காந்தியின் தோல்வி பற்றிய குறிப்புக்களை அகற்ற மாநில அரசு முடிவு செய்துள்ளது.

மகாராஷ்டிரா மாநில பாடசாலைகளில் ஒன்பதாம் தர மாணவர்களுக்கான வரலாறு மற்றும் அரசியல் விஞ்ஞான பாடநூலில், முன்னாள் இந்தியப் பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி ஆகியோரை விமர்சிக்கும் வகையில் குறிப்புகள் இடம்பெற்றிருந்தன.

ராஜீவ் காந்தியின் போபர்ஸ் ஊழல் பற்றிய குறிப்புகளும், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கொள்கையின் தோல்வி பற்றிய குறிப்புக்களும்இதில்இடம்பெற்றிருந்தன.

இதற்கு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி குடும்பத்தினரை பா.ஜ.க. திட்டமிட்டு கேவலப்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்தநிலையில், இந்தக் குறிப்புக்கள் பாடநூல்களில் இருந்து நீக்கப்படும் என்று மகாராஷ்டிர மாநில கல்வி அமைச்சர் வினோத்தவ்டே மாநில சட்டமன்ற மேலவையில் நேற்று முன்தினம் உறுதியளித்துள்ளார். (இ-7)

## 2020 வரை அரசை மாற்ற இடமளியேன்

### ஜனாதிபதி

2020ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கு எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றிய போது ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

"அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி திட்ட வரைவு உடன்பாடு, மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, 2014 செப்டெம்பர் 4ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. அப்போது மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருந்தார்.

அதற்குப் பின்னர் பதவிக்கு வந்த இந்த அரசாங்கம், சீன நிறுவனத்துடன் பேச்சு நடத்தி, அவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டிருந்த நிலத்தின் அளவையும், 50 வீதமாக குறைத்து குத்தகை உடன்பாட்டை திருத்தியுள்ளோம்.

துறைமுக நகர உடன்பாட்டிலும், சீன நிறுவனத்துக்கு 240 ஏக்கர் நிலத்தை வழங்க மகிந்த அரசாங்கம் இணங்கியிருந்தது. அதனையும் குறைத்திருக்கிறோம்.

சங்கிரிலா விடுதி திட்டத்துக்காக வழங்கப்பட்ட 6 ஏக்கர் காணிகளை மாத்திரம் மீளப் பெற முடியாதது துரதிர்ஷ்டம். அது உறுதி மூலம் விற்கப்பட்டிருக்கிறது.

நான் நாட்டின் ஜனாதியாக இருக்கும் வரையில், ஒரு அங்குல நிலத்தையேனும் எந்தவொரு நாட்டுக்கோ, நிறுவனத்துக்கோ விற்பதற்கு அனுமதிக்கமாட்டேன்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் மூன்று ஆண்டுகளில் நடைபெறும்.

அதற்கு முன்னர் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்களினால் நாட்டையும், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையையும் குழப்புவதன் மூலம், இந்த அரசாங்கத்தை மாற்றியமைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

இதனை இத்தகைய குழப்பங்களில் ஈடுபடுவோர் விளங்கிக்கொள்ள வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமைச்சுப்பதவியை உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும்

### ரவியிடம் பந்துல மீண்டும் வலியுறுத்து

அமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடியாக தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று மகிந்த அணி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்ட கடனை அடைப்பதாகக் கூறி இவர்கள் செய்த வேலை என்ன? அது பாரிய கொள்ளையாகும். வரலாற்றில் அதிகமான கடன் பெற்றுக் கொண்ட காலப்பகுதி 2001 தொடக்கம் 2004 வரையிலான காலப்பகுதியே.

அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் அதிகூடிய கடன்தொகையாக 100 இற்கு 80 வீதம்வரை பெற்றுக் கொள்ளும் வகையில் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு கடன்களைப் பெற்றுக் கொண்டார்.

அதேபோல்கடந்த இரண்டு வருடகாலமாக நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க இதனை 83 சதவீதம் வரை கொண்டு சென்றுள்ளார். இதுதான் இவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கை.

ரவி கருணாநாயக்கவுக்கு வெட்கம், பயம் ஏதும் இல்லாமையாலேயே அனைத்தையும் மேற்கொண்டு விட்டு ஒன்றும் செய்யாதவர் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

பாரிய ஊழலில் ஈடுபட்டுள்ள அவர் உடனடியாக தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என தெரிவித்தார். (இ-7)

## கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களுக்கு என்ன நடக்கிறது என்பதை ஆராயக் குழு

### ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களுக்கு என்ன நடக்கிறது என்பது தொடர்பாக ஆராய அமைச்சரவை உப குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

இந்தக் குழு நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில், அமைச்சர்களான சாகல ரத்நாயக்க, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் பல்வேறு சுற்றிவளைப்புகளின் மூலம்கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களுக்கு என்ன நடந்தது என ஜனாதிபதி இதன் போது கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மேற்படி அமைச்சரவைக் குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)



(பெயரின் முதல் எழுத்துக்கள்: ர, ரி, ரு, ரே, த, தி, து, தே உள்ளவர்களுக்கும்)

எதையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயற்படும் துலாம் இராசி நேயர்களே!

ஜூலை மாதம் 27ஆம் திகதி பெயர்ச்சியாகப் போகும் இராகு, உங்கள் இராசிக்கு 10ஆம் இடம் எனப்படும் தொழில் ஸ்தானத்திற்கு வந்து முத்திரை பதிக்க வைக்கப்போகிறார். இனி பணவரவிற்கு பஞ்சம் ஏற்படாது.

பதினெட்டு மாதங்களுக்கு ஒருமுறை பெயர்ச்சியாகும் இந்த இராகு-கேதுக்கள் புதிய பாதையை உங்களுக்கு புலப்படுத்தும். அதிக நற்பலன்களை அள்ளிக் கொடுக்கும். விதிப்படியே நடக்கும் என்று வீட்டில் அடைந்து கிடந்தவர்கள்கூட, இனி பரபரப்பாகச் செயற்பட்டு பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளப் போகிறார்கள்.

இந்த பாம்புக்கிரகப் பெயர்ச்சி பல வழிகளிலும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கப் போகிறது.

சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவை, தொடக்கத்தில் குரு பார்க்கின்றார். செப்டெம்பர் 2 இற்கு மேல் உங்கள் இராசியிலேயே குரு சஞ்சரிக்கப் போகின்றார். குரு உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு பகைக் கிரகமாக இருந்தாலும் கூட, சுபகிரகம் என்பதால் இடையிடையே நன்மைகளையும் செய்வார். குருப் பெயர்ச்சியின் விளைவாக 5, 7, 9 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. பிள்ளைகளாலும் இல்லத்தில் உள்ளவர்களாலும் பெரியளவில் நன்மைகள் கிடைக்கும்.

டிசெம்பர் மாதத்தில் சனியும் பெயர்ச்சியாகப் போகிறது. ஏழரைச் சனி விலகுவதால் வாழ்வில் வசந்தம் ஏற்படும். வாய்ப்புகள் தானே தேடி வரும். இந்த மூன்று கிரகங்களின் பெயர்ச்சியும் இனிய பலன்களையே உங்களுக்கு வழங்கப் போகின்றது.

இருப்பினும் 10ஆம் இடத்து இராகுவால் முத்தான பலன் கிடைக்கவும், தொழிலில் முன்னேற்றம் கூடவும், சுக ஸ்தான கேதுவால் ஆரோக்கியத் தொல்லைகளிலிருந்து விடுபடவும், நாகசாந்திப் பரிகாரங்களை அனுகூலமான நாட்களில் சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று செய்து கொள்வது நல்லது.

**முத்தான தொழில் வழங்கும் பத்தா மிடத்து இராகு!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11ஆம் இடமான லாப ஸ்தானத்திற்கு இராகு பகவான் வீற்றிருந்தார். இப்பொழுது அவர் 10ஆம் இடத்திற்கு மாறுகிறார். தொழில் ஸ்தானம் வலிமையடைகின்றது. எனவே தொழில் தொடங்க ஒருசிலருக்கு வாய்ப்புகள் கைகூடி வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர் விருப்ப ஓய்வு பெற்று சுயதொழில் செய்ய முன்வருவர்.

பத்திலே அரவு நின்றால்
பணிச்சுமை அதிகரிக்கும்!
முத்தான தொழிலும் வாய்க்கும்!
முன்னேற்றம் வந்து சேரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இராகுவால் பலவித நன்மைகள் வந்து சேரப்போகின்றது. இனி கவலை என்ற மூன்றெழுத்து உங்கள் அகராதியில் இருந்து விலகும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுப்பர். தொழில் வளர்ச்சி அமோகமாக இருக்கும்.

பொருளாதார நிலை உயரும் என்பதால் அதன் மூலமாக இடம், பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தன்னம்பிக்கையும் தைரியமும் கூடும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்கள் உறுதுணையாக இருப்பர். மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்தி பார்க்கும் யோகமும் உண்டு.

உத்தியோகம் சம்பந்தமாக முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைக்கக் கூடிய நேரமிது. ஒரு சிலருக்கு வெளிநாடு செல்

தால் வீண் விரயம் ஏற்படாமலிருக்க, இல்லம் கட்டிக் குடியேறுவது, பிள்ளைகளின் திருமணம், பெற்றோர்களின் மணிவிழா போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள்.

தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. உறவினர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகவே தெரியும். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களை நீங்கள் இனம் கண்டு கொள்வது நல்லது. சொந்த பந்தங்களின் பகையை வளரவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பட்டப்படிப்பை முடித்த பிள்ளைகள் பட்ட மேற்படிப்பு படிக்க வெளிநாடு செல்ல வேண்டும் என்று விரும்பினால் அதற்கு உதவித் தொகை கிடைக்கும். ஞானகாரகன் கேது ஆன்மீகத்தில் நாட்டத்தை செலுத்தும். ஆலயத் திருப்பணிகளுக்கு செலவிடுவீர்கள். உங்கள் முன்னோர் கட்டிய கோவிலைப் பராமரிக்கச் செலவிடுவீர்கள். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியை மீதியும் தொடருவீர்கள். அசையா சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அருளாளர்களின் ஆலோசனைகள் அப்போதைக்கப்போது கைகொடுக்கும். பொது



பரிசீலிக்கப்படும். தந்தைவழி அன்பிற்கு பாத்திரமாகி நலம் காண்பீர்கள். புதன் 12ஆம் இடத்திற்கும் அதிபதியாக இருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும் நேரமிது.

சனி சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (4.4.2018 முதல் 11.12.2018 வரை) இக்காலத்தில் சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு

## பத்தில் இராகு வருகிறது! முத்திரை பதிக்கப் போகிறது!




லும் யோகம் வாய்க்கும். 'சம்பள உயர்வு வரவில்லையே' என்று சங்கடப்பட்டவர்களுக்கு சந்தோசத் தகவல் வந்து சேரும்.

செயல் ஸ்தானத்தில் பாம்பு கிரகங்கள் சஞ்சரிக்கும் பொழுது செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். வியாபார முன்னேற்றம் கருதியும் புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு மூலதனமாகவும் பெற்றோர்களிடம் இருந்து ஒரு தொகை கிடைக்கலாம்.

குருவின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் ஒருசிலருக்கு குடும்பத் தொழிலையே கவனிக்கும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தினர்களின் பொருளாதாரத் தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும் வழிவகுத்துக் கொடுப்பீர்கள். வீடு, பயிர், நிலம், தோட்டம் வாங்கி அதை பராமரிக்கும் யோகம் ஒருசிலருக்கு வரும்.

10ஆல் இராகு வரும் பொழுது பணிச்சுமை அதிகரிக்கும் என்றும் பல பணியாளர்களை வைத்து வேலை வாங்கும் யோகம் உருவாகும் என்றும் ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பெரிய தொழிற்சாலைகள் நடத்தும் வாய்ப்பு அல்லது கல்வி நிலையங்கள், பொருள் உற்பத்தி நிலையம் போன்றவற்றை ஏற்படுத்தி அதை மேற் பார்வையிடும் யோகம் வந்து சேரும்.

**நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவின் பலன்!**

சுக ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் 4ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி ஏற்படும். இருப்பினும் சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு ஓரளவு மருத்துவச் செலவுகள் குறையும். கேதுவின் சஞ்சாரத்

ஜன தொடர்பு நன்மை தரும். இல்லம் கட்டிக் குடியேறும் அமைப்பு கூட இனிதே நடைபெறலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு நன்மைகள் நடைபெறும் நேரமிது. ஆடை, ஆபரணங்கள் ஆசை தீர வாங்கி அணியும் வாய்ப்பு கிட்டும். ஆரோக்கியம் சீராகும். தாய்வழி ஆதரவு கொஞ்சம் குறையலாம். உடன் பிறப்புகளில் ஒரு சிலர் மட்டும் உங்களோடு இணைந்து செயற்படுவர்.

கணவன் - மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் அதில் உயர்வு ஏற்பட்டு கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். வீடு வாங்கும் யோகம் உண்டு. மற்றவர்களுக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். பணியில் இருப்பவர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச்செல்வது நல்லது. சுக ஸ்தான கேதுவால் உடல் ஆரோக்கியம் அடிக்கடி சீர்கெடலாம். எனவே நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்து நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

பத்தாமிடத்து கேதுவால் பணத் தேவைகள் பூர்த்தியாகவும் தொழில் வளர்ச்சி கூடவும் சுக ஸ்தான கேதுவால் சுகங்களும் சந்தோசங்களும் வந்து சேரவும் பாம்புக் கிரகத்துக்குரிய சிறப்பு வழிபாடுகளை அனுகூல நாளில் செய்வதோடு வெள்ளிக்கிழமை தோறும் லட்சுமியை வழிபடுவது நல்லது.

**பாதசாரப்படி இராகுதரும் பலன்கள்!**

புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 3.4.2018 வரை) இக்காலத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் உங்களுக்குத் தேவை. உத்தியோகத்தில் நிர்வாகத்தினரின் வழிகாட்டுதலைப் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. இல்லையேல் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். பதவி உயர்விற்கு உங்கள் பெயர்

கைகூடிவரும். தொழில் சீராக நடைபெறும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். திறமை பளிச்சிடும் நேரமிது.

குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (12.12.2018 முதல் 12.2.2019 வரை) இக்காலத்தில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். உடன் பிறப்புகளின் பகை அதிகரிக்கும். எதிரிகளின் பலம் கூடும். இந்த நேரத்தில் மிகவும் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

**பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!**

செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.7.2017 முதல் 29.11.2017 வரை) இக்காலம் ஒரு பொற்காலமாகும். எதிர்பாராத தொகையும் வந்து சேரும். இயற்கையாகத் தொழிலிலும் இலாபம் வந்து சேரும். சொத்துக்கள் வாங்குவதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வீர்கள்.

சொந்த பந்தங்களுக்கும் உதவி செய்வீர்கள். மருத்துவச்செலவுகள் குறையும். உற்சாகமும் தெம்பும் உடலில் குடிகொள்ளும். இதுபோன்ற காலங்களில் செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபடுவது நல்லது.

சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (30.11.2017 முதல் 7.8.2018 வரை) இக்காலம் ஒரு இனிய காலமாகும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். கடன் பிரச்சினை தீரும். கண்ணியம்மிக்க மனிதர்கள் நீங்கள் எண்ணிய காரியத்தை எளிதில் முடித்துக் கொடுப்பர்.

சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (8.8.2018 முதல் 12.2.2019 வரை) விழிப்புணர்ச்சி அதிகம் தேவைப்படும் நேரமிது. வீடு மாற்றங்களும் நாடு மாற்றங்களும் உருவாகலாம். உடல் உபாதைகள் அதிகரிக்கும்.

பல பணிகள் பாதியிலேயே நிற்கலாம். மூத்த சகோ தரர்களால் முன்னேற்றத்தில் பாதிப்புகள் ஏற்படாமல் அனுசரித்துச் செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு, போயா தினங்களில் தனியார் வகுப்புக்களை தடைசெய்வதற்கான சட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

இனிவரும் காலங்களில் ஞாயிற்றுக்கிழமை, போயா விடுமுறை தினங்களில் 2 மணிக்கு முன்பாக தனியார் வகுப்புக்களை நடத்துவதை தடைசெய்வதற்கான சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வாழ்க்கைக்கு 40 ஆண்டுகள் பூர்த்தியாவதையிட்டு மஹரகமயில் நேற்று இடம்பெற்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எந்த அளவிற்கு ஒரு மனிதர் கற்றிருந்தாலும் அவர்கள் சமயம் பற்றி அறிந்திருக்காவிடின் அதனால் பயனில்லை. அறநெறிக்கல்வியை கற்காவிட்டால் தாம் கற்ற மற்றைய கல்வியினை சமூகத்திற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியாமல் போகும்.

அதேபோல் அறநெறிக் கல்வி கற்றவர்களால் சமூகத்திற்கு என்றும் பாதிப்பு கிடையாது. அவர்களால் நன்மை மாத்திரமே கிடைக்கும். எனவே அதற்கான சூழலை சமூகத்தில் உருவாக்கி கொடுப்பதற்கான சட்டமூலத்தினை அமுல்படுத்துவது தொடர்பில்துறைசார்ந்தவர்களுடன் பேசியுள்ளோம்.

அதற்கமைய ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் போயா தினங்களில் தனியார் வகுப்புக்களை இரத்துச் செய்யும் வகையிலான சட்டமூலத்தினை விரைவில் பாராளுமன்றத்தில் அமுல்படுத்துவோம்.

இது தொடர்பில் தனியார் கற்கை நிறுவனங்களின் ஆசிரியர்களுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் மேற்படி தினங்களில் மாணவர்களை அறநெறி பாடசாலைகளுக்கு அனுப்புமாறும் மாணவர்களுக்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார். (இ-7)

# மோசடிக்காரர்களே ஆட்சி செய்கின்றனர்

## ஞானசாரர் கூறுகிறார்



மோசடிகாரர்கள் நாட்டை ஆட்சி செய்வதாக பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் தரப்பினரே தற்போது நாட்டை ஆட்சி செய்து வருவதாகவும், தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறிய நோக்கங்களை அடையத் தவறியுள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை ஊழல்மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் ஆட்சியாளர்கள் அந்தந்த பதவிகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் வர்ண இரவுகள்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய சாதனையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக நடத்தப்படும் வர்ண இரவுகள் நிகழ்ச்சி இன்று வியாழக்கி ழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்ட பத்தில் அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர் என். துஷ்யந்தன் பிரதம விருந்தினராகவும் கமலாதேவி துஷ்யந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-3)

# போலிப் பயணச் சீட்டை பயன்படுத்தியவர் கைது

போலிப் பயணச்சீட்டு ஒன்றைப் பயன்படுத்தி இந்தியாவிற்குள் பிரவேசிக்க முயற்சித்த இலங்கையர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

டில்லி விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த இலங்கையரை கைது செய்துள்ளனர். நுவான் பெர்னாண்டோ என்ற இலங்கையரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் விமான நிலையத்தில் உலவித் திரிந்த போது குறித்த நபரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து இந்திரா காந்தி விமான நிலையத்திற்கு வந்த தாயை பார்ப்பதற்காக தாம் வந்திருப்பதாக குறித்த நபர் அதிகாரிகளிடம் குறிப்பிட்டுள்ளார். ரத்து செய்யப்பட்ட பயணச் சீட்டை பயன்படுத்தியதாக குறித்த இலங்கையர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1151

Search for people, places and things Nagendram Home

**நிலா**




**அகிலா**




**சிவா**





**டினேஸ்**




**வைஸ்ணவி**




**முகுந்தன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13-ம் திருத்தத்தை மகிந்த ஏன் இரத்துச் செய்யவில்லை

## அமைச்சர் சமரசிங்க கேள்வி



(கொழும்பு)

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தைப் போன்று அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் காட்டிக்கொடுப்பு என்றால் மகிந்த ராஜபக்ஷ 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஏன் நீக்கவில்லை என துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சர் மகிந்த சமரசிங்க கேள்வியெழுப்பினார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது துறைமுக ஒப்பந்தமானது இந்திய- இலங்கை ஒப்பந்தம் போன்றதொரு காட்டிக்கொடுப்பு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருப்பது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையானது இலங்கை இந்திய ஒப்பந்தம்போன்று காட்டிக்கொடுப்பாகும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அப்படியாயின் அவர் நாட்டில் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாக ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்திருக்கலாம். அவர் ஏன் செய்யவில்லை.

அத்துடன் அவருக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும்போது இதனை ரத்துச் செய்திருக்கலாம். ஆனால் அவர் செய்யவில்லை.

9 மாகாண சபைகளில் 7 மாகாணங்களில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி முதலமைச்சர்களே இருக்கின்றனர். 88ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மாகாண சபையில் போட்டியிடா விட்டாலும் அதன் பின்னர் போட்டியிட்டது.

13 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு அதிகாரம் இருந்தும் அவர் அதனை செய்யாமல் இன்று நாங்கள் காட்டிக்கொடுத்ததாக தெரிவிக்கின்றார்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷ இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்து கலந்துரையாடும்போது 13ஆவது திருத்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அப்போது 13க்கு அப்பால் சென்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்த தகவலை இந்திய வெளிவிவகார அமைச்சர் லோக் சபையில் தெரிவித்தார். இந்த செய்தி ஊடகங்களில் வெளிவந்தவுடன் பரவலாக பேசப்பட்டு வந்தது.

அப்போது அவரின் ஊடகப் பிரிவு ஜனாதிபதி இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு அவ்வாறு தெரிவிக்கவில்லை என அறிக்கை வெளி யிட்டது.

இதனால் இந்திய- இலங்கை நாடுகளுக்கிடையிலான நல்லுறவுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. எனவே இலங்கை- இந்திய ஒப்பந்தத்தினூடாக ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை ரத்துச்செய்வதற்கு அதிகாரம் இருந்தும் அதனை செய்யாமல் தற்போது அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் இலங்கை- இந்திய ஒப்பந்தம் போன்று காட்டிக்கொடுப்பு என தெரிவிப்பதில் நியாயம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சோதிடர் விஜயமுனியின் பிணை நிபந்தனை தளர்வு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் இயற்கையாகவே மரணமடைந்து விடுவார் எனக் கணித்த, விஜித் ரோஹண விஜய முனி என்ற சோதிடருக்கான பிணை நிபந்தனை தளர்த்தப்பட்டுள்ளது.

மாதாந்தம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீ.ஐ.டி) ஆஜராக வேண்டுமென்ற பிணை நிபந்தனையில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சோதிடரின் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீ.ஐ.டி), வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில், ஆஜராக வேண்டும் என விதிக்கப்பட்ட பிணை நிபந்தனையைக் குறைக்க வேண்டும் என கோரி நின்றார்.

கோரிக்கையைக் கவனத்தில் கொண்ட நீதவான், மாதாந்தம் இரண்டாவது வாரத்தின் ஞாயிற்றுக்கிழமைகளில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீ.ஐ.டி) ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2017ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதிக்கு முன்னர் இயற்கையாவே மரணமடைவார் என்றும் அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்றும் அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்றும் கணித்திருந்தார்.

அதன் பின்னர் இடம்பெறும் நாடாளுமன்ற தேர்தலில், முன்னாள் ஜனாதிபதியும் எம்.பியுமான மகிந்த ராஜபக்ஷ, நாட்டின் பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார் என்றும் கணித்திருந்த அவர், அந்தக் காணொலியை பேஸ்புக்கிலும் வெளியிட்டிருந்தார்.

பொதுமக்களைத் தவறாக வழிநடத்தும் வகையில் போலியான கருத்தைத் தெரிவித்து அவதூறான காணொலியை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால், ஜனவரி 31ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட அவர், அன்றைய தினமே ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டார்.

எனினும், நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமையால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர், பெப்ரவரி முதலாம் திகதியே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வெளிநாட்டுப் பயணத் தடையும் வாராந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் சீ.ஐ.டியில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் எனவும் பிணை நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பிணை நிபந்தனையைத் தளர்த்திய நீதவான், வழக்கை, நவம்பர் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (இ-7)

## சவுதியிலிருந்து நாடு திரும்பியவர் சடலமாக மீட்பு

சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பண்டாரநாயக்க விமான நிலையத்தில், 49 வயதான அப்துல் வஹிட் என்பவரே இவ்வாறு நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கண்டி தெல்தெனிய பகுதியைச் சேர்ந்த இவர், திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. சவுதியில் தொழில் புரிந்து வந்த குறித்த நபர் தனது மனைவியை அழைத்துச் செல்வதற்காக வந்த போது இவ்வாறு மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். (இ-7)

# பன்முக நிதியைக்கூட எமது மக்களுக்கு சுதந்திரமாக பகிர்ந்தளிக்க முடிவதில்லை

## சரத் பொன்சேகா மீது யோகேஸ்வரன் குற்றச்சாட்டு



நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பன்முக நிதிகளை வழங்கும் போது கூட சரத் பொன்சேகா இராணுவத்தை போன்று செயற்படுகின்றதாக நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதனால் பன்முக நிதியை மக்களுக்கு சுதந்திரமாக பகிர்ந்தளிக்க முடிவதில்லை என அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

வாழைச்சேனை நாசிவன்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் ரீ.ஜெயப்பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

நாடாளுமன்றில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கிடைக்கப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய பாடசாலைகளுக்கு எந்த பொருட்களும் வழங்க முடியாதுள்ளது.

தேசிய கொள்ளைகள் அமைச்சின் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தை பிரதி அமைச்சராக இருக்கின்ற சரத் பொன்சேகாவிடம் கையளித்துள்ளனர்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பன்முக நிதிகளை வழங்கும் போது கூட அவர் இராணுவத்தை போன்று செயற்படுகின்றார். இதனால் சுதந்திரமாக பன்முக நிதியை மக்களுக்கு பகிர்ந்தளிக்க முடிவதில்லை எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் மன்னிப்பு கோரிய அமைச்சர் ரவி

(கொழும்பு)

மத்திய வங்கியின் திறைசேரி பிணை முறிப்பத்திர விவகாரம் சம்பந்தமாக சாட்சியமளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆணைக்குழுவிற்கு சமுகமளித்துள்ளார்.

கடமைகளின் நிமித்தம் இரண்டு முறை ஆணைக்குழுவில் ஆஜராக முடியாது என அறிவித்திருந்த அமைச்சர் நேற்று ஆஜராகுவதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆணைக்குழுவில் நேற்று முற்பகல் 10.30 க்கு சாட்சியமளிக்க ஆரம்பித்துள்ளார்.

இரண்டு முறை சமுகமளிக்க முடியாது போனமைக்கு அமைச்சர் முதலில் மன்னிப்பு கோரியுள்ளார். அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டதால், தன்னால் கலந்து கொள்ள முடியாது போனது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியமை, கொழும்பில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கச் சென்றமை, அங்குள்ள வீடொன்றை கொள்வனவு செய்தமை ஆகியன குறித்து சாட்சியமளிக்க தமது தரப்புவாதி ஆணைக்குழுவில் ஆஜராகியுள்ளதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அரசகுலரட்ன கூறியுள்ளார்.

இதேவேளை, பிணை முறிப்பத்திர விவகாரம் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவின் பொறுப்பில் இருக்கும் அர்ஜூன் அலோசியஸின் தொலைபேசி தரவுகளை அழிக்க முயற்சித்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று முன்தினம் ஆணைக்குழுவில் தெரிவித்திருந்தது.

அர்ஜூன் ஆலோசியஸின் மனைவியான அஞ்சலி மகேந்திரன் தொலைபேசி எண்ணை பயன்படுத்தி வருகிறார் என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட கூறியுள்ளார்.

அர்ஜூன் அலோசியஸ் 6 மாதங்களுக்கு முன்னர் இருந்து பயன்படுத்தி வந்த தொலைபேசி இலக்கத்தை ஆணைக்குழுவிடம் வழங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# காத்திருப்பு தொடர்கிறது



வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் காணமல் போனோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்ட இடத்திற்கு அரசியல் தலைவர்கள் நேற்று முன்தினம் (01.08.2017) வருகை தந்த போதிலும் எவ்வித உறுதிமொழிகளையும் வழங்கவில்லை என காணாமல் போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் 140 ஆவது நாளாகவும் உறவினர்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு வருகை தந்த அரசியல் பிரமுகர்கள் தங்களை சந்தித்து உறுதிமொழி வழங்குவார்கள் என காணாமல் போனோரின் உறவினர்கள் காத்திருந்தனர்.

ஆனால் கூட்டம் முடிவடைந்ததும் அரசியல் பிரமுகர்கள் தம்மைக் கவனிக்காது சென்றதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாகாணசபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், வி.சிவயோகம் ஆகிய மூவர் மட்டுமே தம்மை வந்து சந்தித்தாகவும் அவர்களும் எவ்வித உறுதிமொழியும் வழங்கவில்லை எனவும் தெரிவித்தனர். (இ-60)

# ஜனாதிபதியின் வாசஸ்தலம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி இல்லை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் முன்பாக, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை, கறுவாத்தோட்ட பொலிஸார் நிராகரித்துள்ளனர்.

அகில இலங்கை மோட்டார் சைக்கிள் சாரதிகள் சங்கமே, மேற்படி கோரிக்கையை விடுத்திருந்தது.

'இளைஞர்களின் இரும்புக் கனவை தகர்க்காதே' என்ற தொனிப்பொருளில், இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவிருந்ததாக, எழுத்து மூலமாக அறிவித்திருந்த அந்த சங்கத்தின் செயலாளர் ஷிரந்த அமரசிங்ஹ, அதற்கான அனுமதியையும் கோரியிருந்தார்.

இந்நிலையில், கறுவாத்தோட்ட பொலிஸாரினால், அனுப்பிவைக்கப்பட்டுள்ள பதில் கடிதத்திலேயே, ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு முன்பாக, எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கமுடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது

காலி முகத்திடலில் எதிர்வரும் 13ஆம் திகதியன்று பேரணியை ஆரம்பித்து, ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்துக்கு முன்பாக, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு அந்தச் சங்கம் தீர்மானித்திருந்தது.

ஜனாதிபதி உள்ளிட்ட பிரமுகர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதனால், அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு இடமளிக்கமுடியாது என்றும் கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில், அகில இலங்கை மோட்டார் சைக்கிள் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் ஷிரந்த அமரசிங்ஹ, தெரிவிக்கையில், "திட்டமிட்டதன் பிரகாரம் எதிர்வரும் 13ஆம் திகதியன்று, காலி முகத்திடலில் காலை 9.30க்கு பேரணி ஆரம்பமாகும். எனினும், பேரணி நிறைவடையும் இடத்தை, தற்போதைக்குக் குறிப்பிடமாட்டோம்" என்றார். (இ-7)

# சந்தைப்படுத்தல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுடன் இணைந்த அனைத்து நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து CRT சந்தைப்படுத்தல் கண்காட்சியை எதிர்வரும் 11.12. 13 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கண் காட்சியில் தேசிய, சர்வதேச மட்டத்திலானவர்கள் பங்கு பற்றவுள்ளனர். வடக்கு மாகாணத்தில் உள்ள தென்னை செய்கையாளர்களும், தற்போது தென்னைசார் கைத்தொழில்களை மேற்கொள்பவர்களும் எதிர்காலத்தில் தென்னையில் முதலீடு செய்ய விரும்புபவர்களும் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என யாழ்.தென்னை பயிர்ச் செய்கை பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்துள்ளார். (இ)

# உலக காசநோய் தினம் அனுஷ்டிப்பு





"காசநோயை ஒழிப்பதற்கு எல்லோரும் ஒன்றுபடுவோம்" எனும் தொனிப் பொருளில் உலக காசநோய் கடந்த 31 ஆம் திகதி பண்ணையில் அமைந்துள்ள வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்தியர் ஆர். மணிவாசகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காசநோய் தொடர்பாக வைத்தியர்களின் விழிப்புணர்வு கருத்துக்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதுடன், காசநோய் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம். காசநோய் கட்டுப்பாட்டு பணிப்பாளர் வைத்தியர் திருமதி காந்தி அரியரத்ன. யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர், மாணவர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள். பொதுமக்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7-8-9)

# தாழ் இறங்கும் பிரதேசத்தில் அமைச்சர் மகிந்த அமரவீர



(கொழும்பு)

உமா ஓயாத்திட்டத்தால் தாழ் இறங்கும் பண்டாரவளை திக்கறாவ பிரதேசத்திற்கு இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர கடந்த 31 ஆம் திகதி திடீர் விஜயம் செய்துள்ளார்.

குறித்த பகுதிக்கு இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் உமா ஓயா நீர் திட்டப்பகுதிக்குச் சென்று பிரதான செயற்றிட்ட அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். மேலும் உமா ஓயா நீர் சுரங்கத்தினையும் பார்வையிட்டுள்ளனர். (இ-7)

# மலையகத்தில் வைத்தியர்கள் நேற்று கறுப்புப்பட்டி அணிந்து போராட்டம்





சைட்டம் தனியார் வைத்திய கல்லூரிக்கு எதிராக மலையகத்தில் பல வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் நேற்று (02) கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

டிக்கோயா வைத்தியசாலையிலும் வைத்தியர்கள் நேற்று காலை சேவை நேரத்தில் கறுப்புப்பட்டி அணிந்து தமது எதிர்ப்பை தெரிவித்து வழமை போல் வைத்திய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இலவச சுகாதார சேவை மற்றும் இலவசக் கல்வியைப் பாதுகாக்க கோரியும் சைட்டம் தனியார் வைத்தியக் கல்லூரியை அரசுடைமையாக்கக் கோரியும் நேற்று நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பணிப்பகிஷ்கரிப்பு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## காணாமல் போனது யார்?



பொழுது விடியாத பின்னிரவு நேரத்தில் பரமார்த்த குரு பயணம் செய்துகொண்டிருந்தபோது, ஆறு ஒன்று குறுக்கிட்டது. ஆறு வேகமாக சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது.

ஆற்றில் சலசல இரைச்சல் இருப்பதால் அது விழித்துக் கொண்டிருக்கிறது என்று குரு கருதினார். அதனால், இந்த வேளையில் ஆற்றைக் கடப்பது ஆபத்து எனப் பயந்தார். எனவே. ஆறு தூங்கும் வேளையில் கடப்பது நல்லது என்று முடிவு செய்தார்.

ஆற்றின் கரையில் இருந்த ஒரு மரத்தடியில் தனது சீடர்களுடன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழித்து, குரு தனது சீடர்களில் ஒருவனான மட்டியை அழைத்தார். அவன் கையில் ஒரு கொள்ளிக்கட்டையைக் கொடுத்து, ஆற்றின் அருகில் சென்று, அது இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறதா? தூங்கத் துவங்கி விட்டதா? என்று பார்த்து வருமாறு அனுப்பினார்.

மட்டி. தன் குருவின் கட்டளையை ஏற்று கொள்ளிக் கட்டையை கையில் பிடித்துக் கொண்டு, ஆற்றை நெருங்கினான். ஆற்று நீர் தன்மேல் பட்டு விடாதபடி எட்டி நின்று கொண்டு கொள்ளிக் கட்டையை நீரில் அமிழ்த்தினான். அது சுரீரென்று ஒலியுடன் அணைந்து விட்டது. அந்த ஒலியைக் கேட்டதும் மட்டி பதறிப் போனான். வேகமாகக் குருவை நோக்கி ஓடி வந்தான்.

குருவே ஆறு விழித்துக் கொண்டிருக்கிறது. கொள்ளிக் கட்டையால் அதைத் தொட்டவுடன் சீறி விட்டது. நல்ல வேளை தப்பியோடி வந்து விட்டேன் என்று பயந்து கொண்டே கூறினான்.

அதனைக் கேட்ட குரு, "நீ போய்ச் சோதித்துப் பார்த்து விட்டு வந்தது நல்லதாய்ப் போயிற்று. ஆறு விழித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் நாம் ஆற்றைக் கடந்தால் ஆற்றின் பொல்லாத கோபத்துக்குள்ளாகியிருப்போம். அது நன்றாகத் தூங்கும் வரை பொறுத்திருந்து, அதன்பின் பயணத்தைத் தொடர்வோம்" என்று கூறிவிட்டு அமர்ந் தார். சீடர்கள். அவரவர்களுக்குத் தெரிந்த கதைகளைக் கூறிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர். பொழுது வெளுக்க ஆரம்பித்தது.

அயர்ந்து தூங்கிய குரு திடுக்கிட்டு எழுந்தார். மடையனை அழைத்தார். "மடையா! பொழுது புலர ஆரம்பித்து விட்டது. இப்போதாவது ஆறு தூங்குகிறதா? விழித்துக் கொண்டிருக்கிறதா? என்று பார்த்து விட்டு வா" என்று கூறினார்.

உடனே மடையன், மட்டி கொண்டு வந்து போட்ட அணைந்து போன கொள்ளிக் கட்டையை எடுத்துக் கொண்டு ஆற்றை நெருங்கினான். கட்டையை நீருக்குள் விட்டான்: எந்தவித ஒலியும் ஏற்படவில்லை. அவனுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வேகமாக ஓடி வந்தான்.

"குரு! இப்போது ஆறு நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டு இருக்கிறது" என்று கூறினான். "அப்படியா. இது தான் சரியான வேளை யாரும் எந்த ஒலியும் எழுப்பாமல் மிகவும் அமைதியாக வாருங்கள். சப்தம் போட்டால் ஆறு விழித்துக் கொள்ளும்" என்று தன் சீடர்களை எச்சரித்து விட்டு மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து குரு ஆற்றை நோக்கி நடக்க, சீடர்களும் பின் தொடர்ந்தனர். பயந்து கொண்டே ஆற்றைக் கடந்து, ஒரு வழியாக அக்கரை வந்து சேர்ந்தனர்.

தன்னுடைய சீடர்கள் அனைவரும் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டார்களா? என்று சரிபார்க்க குரு எண்ணினார். தனது சீடர்களில் ஒருவனை அழைத்து, "சீடனே! என்னையும் சேர்த்து நாம் ஆறு பேர். நாம் அனைவரும் பத்திரமாக இருக்கிறோமா? நம்மில் யாரையாவது அந்தப் பொல்லாத ஆறு விழுங்கி விட்டதா? எனச் சரிபார்த்து எண்ணிக்கூறு?" என்று கூறினார். அபிஷ்டு தன் முன்னால் நிற்பவர்களை ஒன்று இரண்டு என்று எண்ண ஆரம்பித்தான். தன்னை மட்டும் சேர்க்காமல் மற்றவர்களை மட்டும் எண்ணி, "குருவே, ஐந்து பேர் தான் உள்ளோம்" என்று கூறினான். ஆறு பேரில் ஒருவரைக் காணோம் என்று குரு திடுக்கிட்டுப் போனார்.

(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 -கொலம்பஸ் ஸ்பெயினைவிட்டுப் புறப்பட்டார்.
- 1492 - ஸ்பெயினில் இருந்து யூதர்கள் கத்தோலிக்கர்களினால் வெளியேற்றப்பட்டனர்.
- 1678 - அமெரிக்காவின் முதலாவது கப்பல். லெ கிரிஃபோன் றொபேர்ட் லசால் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1783 - ஜப்பானில் அசாமா மலை வெடித்ததில் 35.000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1858-இலங்கை தொடருந்து சேவையை ஆளுநர் சேர் ஹென்றி வோர்ட் ஆரம்பித்து வைத்தார்.
- 1860 - நியூசிலாந்தில் இரண்டாவது மாவோரி போர் ஆரம்பமானது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி பிரான்சுடன் போர் தொடுத்தது.
- 1916 - ஐரிய தேசியவாதி சேர் றொஜர் கேஸ்மெண்ட் ஈஸ்டர் எழுச்சியில் அவரின் பங்களிப்புகளுக்காக லண்டனில் தூக்கிலிடப்பட்டார்.
- 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் பெரும் தலைவரானார்.
- 1949 - தேசிய கூடைப்பந்து சங்கம் ஐக்கிய அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.
- 1960 - நைஜர் பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1976 - காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1990 - கிழக்கிலங்கையில் காத்தான்குடியில் முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் பெண்கள், குழந்தைகள் உட்பட 103 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - மவுரித்தேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி மாவோயா ஊல்ட் தாயா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 2006 - திருகோணமலை தோப்பூர் அல் நூராப் பாடசாலையில் தங்கியிருந்த அப்பாவிப் பொதுமக்கள் 12 பேர் எறிகணை வீச்சில் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள்

- 1886 - மைதிலி சரண் குப்த், இந்தியக் கவிஞர், எழுத்தாளர் (இ. 1964)
- 1948 - வே.ம.அருச்சுணன், மலேசியத் தமிழ் எழுத்தாளர்
- 1950-ஆறு. இராமநாதன், தமிழக எழுத்தாளர்
- 1979-இவாஞ்சலீன் லில்லி, கனேடிய நடிகை
- 1984-சுனில் சேத்ரி, இந்தியக் கால்பந்தாட்ட வீரர்
- 1989 - இழுல்சு பியான்கி, பிரெஞ்சு காரோட்ட வீரர் (இ. 2015)

இறப்புகள்

- 1975-உடுவில் தமிழ்ப்பண்டிதர் வ.மு.இரத்தினேஸ்வர ஐயர் தமிழாசிரியர் பௌராணிகர் கவிஞர் சைவ சமயப் பிரசங்கியர்
- 1975 - என்.வி.நடராசன், தமிழக அரசியல்வாதி (பி. 1912)
- 1993-சுவாமி சின்மயானந்தா, வேதாந்த தத்துவத்தைப் பரப்பிய இந்திய ஆன்மீகவாதி (பி. 1916)
- 2008 - அலெக்சாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற உருசிய எழுத்தாளர் (பி. 1918)

சிறப்பு நாள்

- விடுதலை நாள் (நைஜர், 1960)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 140 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 350 | 280 | 400 | 350 |
| தக்காளி | 160 | 200 | 120 | 170 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 120 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 140 | 160 | 80 | 120 | 140 | 120 |
| கரட் | 160 | 200 | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 50 | 100 | 110 | 80 | 80 | 100 |
| புடோல் | 60 | 120 | 50 | 70 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 120 | 60 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 180 | 180 | 150 | 150 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 90 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 300 | 140 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 120 | 50 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 150 | 120 | 160 | 140 |
| பயற்றங்காய் | 100 | 50 | 150 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 50 | 120 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 50 | 150 | 140 | 60 | 80 |
| கறிமிளகாய் | 160 | 200 | 150 | 200 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 120 | 120 | 120 | 150 |
| போஞ்சி | 160 | 200 | 100 | 160 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 60 | 25 | 50 | 50 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 60 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | — | 240 | 300 | — |
| வெங்காயப்பூ | 180 | 200 | 150 | 160 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 50 | 30 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 50 | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவான்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இனப்பிரச்சினையை தீர்க்காதவரை...

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாதவரை இலங்கையின் அமைதி என்பதும் அபிவிருத்தி என்பதும் சாத்தியப்படாத விடயங்களாகவே இருக்கப்போகின்றன.

கடந்த முப்பது ஆண்டு கால யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதன் காரணமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பது போல இலங்கையின் ஆட்சியாளர்களும் பௌத்த மத பீடங்களும் நினைக்கின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தில், அவர்கள் தென்பகுதிக்குப் பயத்தைக் கொடுத்த போது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற முயற்சிகளில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டனர்.

அதிலும் குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் பெறுமதி வாய்ந்த ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தயாராக இருந்தார்.

எனினும் அன்றைய சூழ்நிலைகள் அந்தத் தீர்வுத் திட்டம் அமுலாகுவதற்குரிய வாய்ப்பைக் கொடுக்கவில்லை.

இப்போது விடுதலைப் புலிகள் இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டனர் என்ற அடிப்படையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தை இழுத்தடிப்பது, காலம் கடத்துவது ஒட்டுமொத்தத்தில் அந்த விடயத்தை அப்படியே கைவிடுவது என்பதுதான் இலங்கை ஆட்சியாளர்களின் முடிவு.

எனினும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் இருப்பதன் காரணமாக,

தமிழ் அரசியல் தலைமையை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிய பேச்சோடு காலம் கழிந்து போகிறது.

உண்மையைச் சொல்லப்போனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலோ அன்றி தமிழ் மக்களுக்கு உரிமை; அதிகாரம் கொடுப்பதற்கோ ஆட்சியாளர்களுக்கும் பீடாதிபதிகளுக்கும் அறவே விருப்பமில்லை.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுத்தால் மட்டுமே சிங்கள மக்கள் நிம்மதியாகவும் பயப்பீதியின்றியும் வாழ முடியும் என்ற நிலைமை இருந்தது.

அதன்காரணமாகவே புலிகளின் காலத்தில் தனிநாடு தவிர்ந்த வேறு எந்தத் தீர்வையும் அதிகாரத்தையும் தருவதற்கு அரசுகள் தயாராக இருந்தன.

இன்று நிலைமை அதுவன்று. தமிழ் மக்களின் பலமான சக்தியாக இருந்த விடுதலைப் புலிகள் இல்லை என்றாகிவிட்ட பின்னர், தென்பகுதியில் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்கின்றனர்.

எனவே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு அவசியமற்றது என்ற நிலைப்பாடே ஆட்சித் தரப்பில் உள்ளது.

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சிங்கள மக்களுக்கானதேயன்றி அது தமிழ் மக்களுக்கானதல்ல என்ற நிலைப்பாட்டில் ஆட்சியாளர்கள் இருக்கும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாதவரை இலங்கையின் அமைதி என்பதும் அபிவிருத்தி என்பதும் நிலைத்ததாக இருக்காது என்பதே யதார்த்தம்.

## பட்டதாரிகள் வழக்கு நவம்பருக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் மற்றும் அகில இலங்கை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் உட்பட நால்வர் மீது, மட்டக்களப்பு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

காந்திபூங்கா முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகள் நடத்திய கவனயீர்ப்புப் போராட்டத்தின் போது, மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நடைபெற்ற போராட்டத்தில், பொது மக்களின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள், அரச கரும நடவடிக்கைகளுக்கும் குந்தகம் அல்லது இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ள முற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில், மார்ச் மாதம் 7ஆம் திகதி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு, நீதிபதி எம்.கணேசராஜா முன்னிலையில், நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவர் ரி.கிஷாந்த், அகில இலங்கை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் தன்னான ஞானரத்ன தேரர் உட்பட நான்கு பேரும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். (இ-7)

## சமுர்த்திப் பயனாளிகள் மேன்முறையீடு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளின் முதற்கட்ட தேர்வில் பெயர் விபரம் வரத் தவறிய சமுர்த்திப் பயனாளிகள் இருவார காலத்திற்குள் தமது மேன்முறையீடுகளை எழுத்து மூலம் சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்குமாறு கோப்பாய் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-134)



## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அன்னை வகுளாதேவியின் கண்களில் நீர் ஆறாகப் பெருகியது கண்டு அநாதை என்று தன்னைச் சொல்லிக் கொண்ட அந்த அநாதரட்சகன் ஆடிப்போனான்.

"அம்மா ஏன் அழுகிறீர்கள்" என்று அவனை அணைத்து அன்புடன் வினவினான்.

மறுமொழியாக அந்த மாதரசி "கண்ணே என்னவென்று எடுத்துரைப்பேன்" உன்னைப் போல் நானும் உறவற்ற அநாதை. வராஹமூர்த்தியின் வாஞ்சையினால் இதுநாள் வரை வாடாமல் இருந்து வந்தேன். அவரது கருணைதான் உன்னை என்னிடம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. உன்னைப் பார்த்த கணமே பகவானது தான் இழந்த கன்றை மீண்டும் பார்ப்பது போல் உணர்ந்தேன். (தொடரும்)

## சத்திய தரிசனம்



### பெற்றவர்களின் கடமை

❖ கூரான கோடரியால் சந்தனமரத்தை வெட்டும்போது, அம்மரம் கோடரி மீது வெறுப்பை உமிழ்வதில்லை. கோபப்படுவதுமில்லை. மாறாக, தன் வாசனையைக் கோடரிக்கு வழங்குகிறது. இதுவே, நல்லோரின் இயல்பு.

❖ யாருடைய நட்பை நாடுகிறோமோ அவரின் குணங்கள் நம்மிடம் படிப்படியாக உண்டாகும். நல்லவர்களின் நட்பு நமக்கு வழிகாட்டுகிறது. தீயவர்களின் நட்பு வாழ்வின் தடத்தையே மாற்றி அழித்துவிடுகிறது.

❖ குழந்தைகள் மனம் மிகவும் மென்மையானது. தரமில்லாத நூல்களையோ, படங்களையோ அவர்கள் படிக்கவோ, பார்க்கவோ கூடாது. பெற்றோர் தான் பிள்ளைகளுக்குச் சரியான வழிகாட்டிகளாக இருந்து துணை செய்ய வேண்டும்.

❖ கொடியில் வளரும் புடலங்காயை நேராக வளர சிறுகல்லைக் கட்டி தொங்கவிடுவர். அதுபோல, வளையும் மனக்கோணலை நேராக்க, கட்டுப்பாடு என்னும் கல்லைக் கட்டுவது அவசியம். அதனால் பிள்ளைகள் விடயத்தில் பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களும் மிகுந்த பொறுப்புள்ளவர்களாக இருப்பது அவசியம்.

## மாகாணமட்ட புதிர்ப்போட்டி

இலங்கை மனிதவு ரிமைகள் ஆணைக்குழுவின் இருபதாவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கடந்த மாதம் 12,13,17,19 ஆகிய தினங்களில் நடத்தப்பட்ட மனிதவுரிமைகள் புதிர்ப் போட்டியில் வலய மட்டத்திலிருந்து மாவட்ட மட்டப் போட்டிக்காக யாழ்ப்பாண வலய யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயம், வடமராட்சி வலய யாழ். வல்வை சிவகுரு வித்தியாலயம், வலிகாம வலய யாழ். மகாஜனக் கல்லூரி, தென்மராட்சி வலய யாழ்.சாவகச்சேரி மகளிர் கல்லூரி, தீவக வலய யாழ். சென்.அன்ரனீஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப் பாடசாலை அணிகளிலிருந்து இரண்டு அணிகளை மாகாண மட்ட புதிர்ப் போட்டிக்கு தெரிவு செய்வதற்கான போட்டிகள் நாளை மறுதினம் 5 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம பெறும்.

இதேவேளை கிளி நொச்சி மாவட்டத்திலிருந்து கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம், கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம் என்பன மாகாண மட்ட போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## தசநாயக்கவுக்கு மறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் கடற்படை பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2008ம் ஆண்டு 11 தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பில், கடந்த 12ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதோடு, நேற்று மீண்டும் கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதற்கமைய, சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-7)

## யாழ். மத்தியஸ்த சபை அமர்வுகள் இடமாற்றம்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்று வந்த ஜே/246 யாழ். மத்தியஸ்த சபை க.பொ.த உயர்தரப் பரீட்சை காரணமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறும் என தவிசாளர் இ.அ.திலகரட்ணம் அறிவித்துள்ளார். (இ

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**தினப் பொருத்தம் என்றால் என்ன?**

ஆரோக்கியத்தைக் குறிக்கும். தினப் பொருத்தம் நிலை அறிய பெண் நட்சத்திரத்தில் இருந்து ஆண் நட்சத்திரம் வரை எண்ணுதல் வேண்டும். எண்ணிக்கை நிலை 2,4,6,8,11,12,32,15,18, 20, 24,26 ஆகியவற்றின் உத்தம நிலை என்ன என்று அறிய வேண்டும்.

பெண் நட்சத்திரம் வரை வரும் எண்ணிக்கையை 9 ஆல் வகுக்க 3.5,7 வந்தால் அதம நிலையாகும்.

அதம நிலைக்கான பரிகாரம்

1,3 ஆக வரும் எண்ணிக்கை விபத்து தாரை

பரிகாரம்: கற்கண்டு போன்ற இனிப்புப் பொருட்களை தானமாகக் கொடுக்கலாம்.

2,5. ஆக வரும் எண்ணிக்கை பிரத்திய தாரை

பரிகாரம்: அன்னதானம் செய்தல் வேண்டும்.

3,7 ஆக வரும் எண்ணிக்கை வதை தாரை

பரிகாரம்: ஏழைப்பெண்களுக்கு பொன் ஆபரணம் தானமாகக் கொடுக்கலாம். (தொடரும்)

## கண்களை பராமரித்திடுவோம்

நாற்பது வயதிற்கு பின்பான பார்வை மங்கலை மூக்குக் கண்ணாடி அணிவதன்மூலம் சீராக்கிட முடியும். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது கண்களைப் பரிசோதனை செய்து கொள்வோம். கண்ணாடி அணியாதுவிடின் நோய் நிலைமை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் அதிகம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைத்தொடர்பு...

மேற்கொண்ட குற்றப்புலனாய்வுத் திணைக்கள கூட்டுக்கொள்ளை. விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.பி.நிஸாந்த சில்வா நீதாய விளக்கம் முன் சாட்சியமளித்துள்ளார்

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கின் நீதாய விளக்க முறையிலான (ட்ரயலட்பார்) விசாரணைகளின் தொடர் விளக்கம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம சங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் யாழ் மேல் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

குறித்த தொடர் விளக்கத்தின் 10ஆம் நாள் சாட்சிய பதிவு நேற்றைய தினம் நடைபெற்றது.

இவ் வழக்கில் 35ஆவது சாட்சியின் சாட்சிப் பதிவானது கடந்த 24.07.2017 அன்று ஆரம்பமாகியிருந்தது. அன்றைய தினம் இச்சாட்சியத்தின் பிரதம சாட்சிப் பதிவினை முற்றாக நெறிப்படுத்த நேரம் போதாமையால் இடைநிறுத்தப்பட்டு நேற்றையதினம் குறித்த தொடர் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது

பிரதி மன்றாதிபதி பி.குமாரரட்ணத்தின் வினாக்களுக்கு அவர் தனது சாட்சியத்தில் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒன்பது எதிரிகளும் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அங்கு சென்றேன். அப்போது முஹமட் இப்லார் என்பவரை சந்தித்தேன்.

அவர் என்னால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பான வழக்கு விசாரணையின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரோடு கதைப்பதற்கு வவுனியா சிறைச்சாலையில் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கைத்தொலைபேசியில் வீடியோ பதிவை மேற்கொண்டு அது அழிக்கப்பட்டால் அதனை மீள பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றதா? எனத் தெரியுமா என கேட்டேன். ஏனெனில் அவர் அதில் (கணினி) நன்கு அறிவுடையவர் என நான் அறிந்திருந்தேன்.

கடந்த 2015.06.18 புதுக்கடை பிரதான நீதவான் நீதிமன்றிற்கு பொலிஸ் கான்ஸ்டபிள் சென்றபோது அவரிடம் முகமட் இப்லார் தன்னை புதுக்கடை நீதிமன்றில் சந்திக்குமாறு எனக்கு செய்தி அனுப்பினார். அதன்படி குறித்த நபரை சந்தித்தேன்.

அப்போது வவுனியா சிறைச்சாலையில் கதைத்த பின்னர் ஒன்பதாவது சந்தேக நபர் (சுவிஸ்குமார்) என்னைப் பற்றி விசாரித்ததாக கூறினார். இந்த வழக்குடன் தொடர்பான வன்புணர்வு வீடியோ பதிவு செய்ததாகவும் அது தொடர்பாக அவரும் அவரது தம்பியான சசிதரன் என்பவரும் அரச சாட்சியாக மாற்றுவதற்கு சந்தர்ப்பம் உள்ளதா என விசாரித்ததாகவும் வீடியோ அழித்த பின்னர் மீண்டும் அதனைப் பார்க்க சந்தர்ப்பம் உண்டா என கேட்டதாகவும் கூறினார். அத்துடன் அரச சாட்சியாக மாற்றினால் எனக்கு 2 கோடி பணம் செலுத்த விரும்புவதாகவும் ஒன்பதாவது சந்தேக நபர் தெரிவித்ததாகக் கூறினார்.

இச் சம்பவம் தொடர்பாக இப்லார் என்பவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கு 2015.08.12 ஊர்காவற்றுறை நீதவானிடம் அனுமதியைப் பெற்றேன். அதன் பின்னர் 2015.08.24ஆம் திகதி கொழும்பில் வைத்து இப்லாரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தோம்.

மேலும் தனக்குத் தெரிந்த விடயத்தை ஊர்காவற்றுறை நீதவானுக்குத் தெரிவிக்க சந்தர்ப்பம் பெற்றுத் தருமாறு அவர் கோரினார். நான் மேலதிக அறிக்கை ஊடாக அதனை மன்றிற்குத் தெரிவித்தேன்.

அதன்பின்னர் தெரியவந்த விடயங்களுக்கு அமைவாக விசாரணையை மேற்கொண்டேன்.

குற்றச் சம்பவம் இடம்பெறும்போது அப்பிரதேசத்தில் இருந்த நபர்கள் தொடர்பாக விசாரணை செய்தேன். குற்றச் செயல் இடம்பெற்ற சூழல் மக்கள் நடமாட்டமற்ற பிரதேசமாகக் காணப்பட்டாலும் எதேச்சையாக அங்கு மக்கள் சென்றிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. அவ்வாறு சென்றவர்கள் யார் என தனிப்பட்ட உளவாளிகள் மூலம் அறிந்து கொண்டேன்.

குற்றச் சம்பவம் நடந்த நேரத்தில் கையடக்கத் தொலைபேசி தொடர்பான விசாரணைகளைச் செய்தேன். 2015.05.13 காலை 6 மணியிலிருந்து 2015.05.14 மணி 12 வரை குற்றச் சம்பவ இடத்தைச் சுற்றிக் காணப்படும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஊடாக அழைப்புக்களை மேற்கொண்ட நபர்கள் தொடர்பாக தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து தகவல்களை பெற்றேன்.

அதற்குக் காரணம் இக்குற்றச் சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஊடாக அழைப்புக்களை மேற்கொண்ட நபர்களின் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே.

தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஊடாக பல்வேறுபட்ட அழைப்புக்கள் தொடர்பாக என்னால் கேட்கப்பட்ட கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்ட உள்வரும் வெளிச் செல்லும் அழைப்புக்கள் தொடர்பாக விபரங்கள் கிடைத்தன. அதன் பின்னர் அந்த இலக்கங்களின் உரிமையாளர்கள் தொடர்பாக கேட்டேன். பலதரப்பட்ட பெயர்கள் தரப்பட்டன.

குறிக்கப்பட்ட பத்துத் தொலைபேசி உரிமையாளர்களை அழைத்து ஏன் அப்பகுதி ஊடாகச் சென்றீர்கள். ஏன் அழைப்புக்களை மேற்கொண்டீர்கள் என விசாரணை செய்யுமாறு ஐ.பி. இலங்கஸ்ஸ்ரீ உள்ளிட்ட குழுவை யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன்.

விசாரணைக்கு அழைத்தபோது இந்நபர்களில் சிலர் சமுகமளித்திருக்கவில்லை. இவ்விசாரணைகள் எமது விசாரணைக் குழு ஊடாக சாதாரண விசாரணை முறையிலேயே மேற்கொள்ளப்பட்டது. இதன்போது ஒரு கையடக்கத் தொலைபேசி இலக்கத்தின் உரிமையாளரான நடராஜா குகனேசன் மறுபெயர் மாப்பிள்ளை என்பவரின் வீட்டிற்குச் சென்றோம்.

அவரிடம் கையடக்கத் தொலைபேசியூடாகவும் இந்தக் குற்றச் சம்பவங்கள் தொடர்பாகவும் சாதாரண விசாரணை நடவடிக்கைக்காகச் சென்றேன். இந்தக் கையடக்கத் தொலைபேசிக்கு சந்திரகாசன், துஷாந்தன் ஆகிய நபர்கள் 2015.05.12, 2015.05.13 ஆகிய திகதிகளில் அழைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த மாப்பிள்ளை என்ற நபரிடம் விசாரணை செய்தபோது சந்தேக நபருக்கு ஏன் தொலைபேசி மேற்கொண்டீர் எனக் கேட்டேன். அதற்கு அவர் கள்ளுக் குடிக்க வருமாறு கூறியதாகக் கூறினார். 2015.05.12 ஆம் திகதி 12.22 மணியிலிருந்து 21.56 மணி வரை அழைப்பு மேற்கொண்டுள்ளனர். 2015.05.13 அன்று 15.50 மணிக்குப் பின்னர் கையடக்கத் தொலைபேசியின் வெளிச்செல்லும் அழைப்புத் தொடர்பாக அறிக்கை இல்லை.

இத்தொலைபேசி இரவு வேளைகளில் பயன்படுத்தப்படாதது தெரியவந்தது. இவ்வாறு இடைநிறுத்தி வைப்பதன் காரணம் என்ன என தெரிய வந்திருந்தது. சந்திரகாசன் இத் தொலைபேசியினை ஓப் செய்து வைக்கச் சொன்னதாக கூறினார். அது என்ன காரணத்திற்கு என வினவிய போது இந்தக் குற்றச் சம்பவத்துடன் அவர் (மாப்பிள்ளை) என்ன விதத்தில் தொடர்புபட்டிருந்தார் என்பதை அறிய முடிந்தது. அது தொடர்பாக அவர் ஊர்காவற்றுறை நீதவானுக்கு தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்குமாறு கோரினார்.

இது இந்தக் குற்றச் சம்பவம் தொடர்பாக தெரியவந்த முதலாவது விடயம் இது என தெரிவித்தார்.

ஏன் அவரை கைது செய்யவில்லை? என பிரதம விசாரணையின் போது கேள்வி எழுப்பப்பட்ட போது,

இவர் அப்பிரதேசத்தில் கள்ளு விற்பவர். அவருடைய வீட்டிலும் கள்ளு விற்கிறார். சந்திரகாசன், துஷாந்தன் ஆகிய சந்தேக நபர்கள் வித்தியா என்ற சிறுமி தொடர்பாக கதைத்துள்ளார்கள் என்பது அவர் மூலமே தெரியவந்தது. துஷாந்தன் வித்தியாவிடம் காதல் தொடர்பிற்கு முயற்சித்ததாகவும் தெரியவந்தது.

இதன்பின்னர் சந்திரகாசன், துஷாந்தன், முதலாம், இரண்டாம், மூன்றாம் சந்தேக நபர்கள் இதன்போது சாட்சி மன்றிடம் மன்னிப்பொன்றைக் கோரி தொடர்ந்து சாட்சியமளிக்கையில், முதலாவது சந்தேக நபர் அல்ல. எதிரிக் கூண்டில் உள்ள இரண்டாவது, மூன்றாவது, சந்திரகாசன், துஷாந்தன், உதயசூரியன் சுரேஸ்கரன். என்ற நபர்கள் மாணவி வித்தியா காலையில் பாடசாலை பயணம் செய்யும் சின்னாலடி என்ற பகுதியில் காலை 7 மணிக்கு சென்று நின்றதாகவும் இதன்போது காதல் தொடர்பாக கேட்கத்தான் இவர்கள் நிற்கிறார்கள் என தான் நினைத்ததாகவும் மாப்பிள்ளை என்பவர் கூறினார்.

ஆனால் அந்த மாணவி வந்த பின்னர் இடம்பெற்ற நடவடிக்கையில் இவர் எதிர்பாராமல் தொடர்புபட்டு விட்டார் என்பது எனக்கு விசாரணைகளூடாக தெரியவந்தது. இதனாலேயே அவரை கைது செய்யவில்லை.

பின்னர் உதயசூரியன் சுரேஸ்கரன் என்பவரை யாழ். அரியாலைப் பிரதேசத்தில் கைது செய்தேன். இவர் சந்தேக நபர்களுடன் நெருங்கிய தொடர்பு காணப்பட்டதுடன் வித்தியாவுடன் காதல் தொடர்பிற்கு துஷாந்தன் முயற்சித்தபோது அந்நபருடன் கூடவே சென்று உதவி செய்தவர். அத்துடன் கொலைச் சம்பவம் இடம்பெற்ற காலம்வரை அச் சம்பவம் தொடர்பில் அவருக்கு தெரிந்திருந்தது. அதனாலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

வித்தியா கொலை செய்யப்பட்டு 8 மாதங்களின் பின்னர் இது தெரிய வந்தது. ஒன்பது சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்ட பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் பத்தாவது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். பதினொராவது சந்தேக நபர் மன்றிற்கு வாக்குமூலம் அளிக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

அதன் பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அதன் பின்னர் தர்மலிங்கம் ரவீந்திரன் (மறுபெயர் குடு ரவி) கைது செய்யப்பட்டார்

2015.05.13 அன்று சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பயணித்த நபர் தொடர்பாக தெரியவந்தது. இதன்படி பாலசிங்கம் பாலச்சந்திரன் என்பவரது வாக்குமூலம் ஊர்காவற்றுறை நீதவானுக்கு வழங்கப்பட்டது.

சம்பவத்தன்று அப்பகுதி ஊடாக பாடசாலை சென்ற மாணவர்கள் தொடர்பாகத் தெரியவந்த பின்னர் குறித்த மாணவர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

சந்தேக நபர்களிடம் பெற்றுக் கொள்ளப் பட்ட கைத்தொலைபேசி தொடர்பில் கைத்தொலைபேசியில் வன்புணர்வு வீடியோ பதிவு செய்யப்பட்டதான தகவல்கள் தெரியவந்தது. சந்திரகாசன், துஷாந்தன் என்பவர்களுடன் சென்று கையடக்கத் தொலைபேசி மற்றும் லப்டொப் கைப்பற்றப்பட்டது.

இந்த மடிக் கணனியில் வன்புணர்வு கொலை தொடர்பான பதிவுகள் உள்ளதா எனப் பரிசோதிக்க ஊர்காவற்றுறை நீதிமன்றின் அனுமதி பெறப்பட்டு மொறட்டுவ பல்கலைக் கழகத்திற்கும் அதன்பின்னர் சேட் நிறுவனத் திற்கும் அனுப்பி வைக்கப்பட்டது என தெரிவித்தார்.

குற்றச் சம்பவம் தொடர்பாக அது இடம்பெறும்போது சில சந்தேக நபர்கள் வேறு இடங்களில் இருந்தது தொடர்பாக தெரியவந்ததா? என கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஆம் என பதிலளித்த அவர் மகாலிங்கம் சசிதரன், நிஷாந்தன், கோகுலன், மகாலிங்கம் சசிகுமார் அல்லது சுவிஸ் குமார் ஆகிய நபர்கள் கொழும்பு வெள்ளவத்தை ஏஞ்சல் லொட்ஜில் இருந்ததாகத் தெரியவந்தது என்றார்.

நான்கு பேரும் இறுதியாக, இலங்கேஸ்வரன் என்பவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் 2015.05.12 அன்று வான் ஒன்றில் ஆலடிச் சந்தியில் இருந்ததாக தெரியவந்தது.

கொழும்பில் அவர்கள் சென்ற இடங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு அவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

அனைத்து விசாரணைகளின் மூலம் மொத்தமாக 12 சந்தேக நபர்கள் இருந்தார்கள். அவர்களில் 9 சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை சட்டமா அதிபரால் தயாரிக்கப்பட்டது.

பத்தாவது சந்தேக நபரான ராஜ்குமார் மற்றும் பன்னிரெண்டாவது சந்தேக நபரான ரவீந்திரன் ஆகியோர் சட்டமா அதிபரின் ஆலோசனையின் கீழ் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். பதினொராவது சந்தேகநபர் உதயசூரியன் சுரேஸ்கரன் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் கீழ் அரச தரப்பு சாட்சியாக மாற்றப்பட்டார் என தெரிவித்து சாட்சி எதிரிக் கூண்டில் இருக்கும் எதிரிகளை அடையாளம் காட்டினார்.

இதனைத் தொடர்ந்து இவ் சாட்சியின் பிரதம சாட்சிப் பதிவானது முடிவுறுத்தப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

இந்நிலையில் இன்றைய தினம் குறித்த வழக்கின் தொடர் விசாரணைகள் மேல் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது. (செ-9)

# 2020க்கு பின்னர் கடனை இலகுவாக செலுத்தலாம்

## பிரதமர் ரணில் நம்பிக்கை



எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் சிறந்த முறையில் நாட்டுக்காக பெற்ற கடனை முகாமைத்துவம் செய்ய முடியும் எனவும், 2020ஆம் ஆண்டில் சிக்கல் இல்லாமல் கடனை செலுத்த முடியும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற தேசிய இளைஞர் சேவை மன்றம் ஏற்பாடு செய்த இளைஞர் அபிவிருத்தி கொடி திட்டத்தின் கீழ் கொடி அணிவிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டின் தேசிய கடன் எமக்கு பெரிய பிரச்சினையாக இருந்தது. இந்த தேசிய கடன் இளம் தலைமுறையினருக்கு உரித்தாகி விடுமா? என்ற சந்தேகம் இருந்தது.

நாட்டில் தற்போது பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

ஏற்றுமதி தொழிலை முன்னேற்றுவதன் மூலம் துரிதமாக பணத்தை சம்பாதிக்க முடியும். கடன் பெறும் நாடாகவும் கீழ் மட்டத்தில் இருக்கும் நாடாகவும் உருவாகும் தேவை மீண்டும் ஏற்படாது.

தற்போது இருப்பதை விட சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடை கோரிய...

றால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சைட்டம் எதிர்ப்பு மாணவர் போராட்டம் மற்றும் நடை பவனியை தடை செய்யக் கோரி போலியகொட பொலிஸாரால் கொழும்பு நீதவான் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

நாளை 4ஆம் திகதி போலியகொடவில் இருந்து கொழும்பு மாநகருக்கு சைட்டம் எதிர்ப்பு பேரணி பிரவேசிப்பதால் பொது மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட வாய்ப்புள்ளதாக இத் தடை உத்தரவு கோரப்பட்டது.

1979இல் இல.15இன் குற்றவியல் சட்ட ஏற்பாடு 106 (01) பிரிவின் பிரகாரம் மேற்படி தடை உத்தரவு கோரப்பட்டது.

இதனை விசாரித்த நீதிபதி பொது மக்களுக்கு இடையூறாக போராட்டம் நடந்தால் குற்றவியல் சட்ட ஏற்பாடு 96 (01) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியதுடன் தடை உத்தரவு கோரும் மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தார். (செ)

## சுற்றிவளைப்பு;...

கைது செய்ததாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளடங்கிய 13, 092 பொலிஸ் அதிகாரிகள் இந்த நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட பொலிஸ் நடவடிக்கையின் போது தேடப்பட்டு வந்த 17 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளுக்காக 1056 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது, போதைப்பொருள் வைத்திருந்தமை, அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் இரவு வேளையில் பாதுகாப்பற்ற முறையில் வாகனம் செலுத்தியமை போன்ற குற்றங்களை அடிப்படையாக கொண்டு மேற்படி கைதுகள் இடம்பெற்றதுடன் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

மைப்பின் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகளின் சந்திப்பு இடம்பெற்றது. இந்த ஒன்றுகூடலில் சமகால அரசியல் நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததாகவும், மாவட்ட ரீதியில் மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளதாகவும், எதிர்காலத்தில் மாதாந்தம் இப்படியான ஒன்றுகூடல்கள் தொடருமெனவும் குறிப்பிட்டதுடன் கலந்து கொண்டவர்களின் பெயர்களை குறிப்பிட மறுத்துவிட்டார்.

மாற்றுத் தலைமை பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலும், புளொட்டுக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் சுழற்சிமுறை உறுப்பினர் ஆசனம் தமிழரசுக்கட்சியின் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள சூழலில் இடம்பெற்றுள்ள இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. (செ-250)

## மேலும் ஒரு...

வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் நல்லூர் அரசடியை சேர்ந்த இளைஞர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று முற்பகல் கைது செய்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரு பொலிஸார் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய சந்தேகத்தின் பேரில் ஏற்கெனவே இருவர் கைதாகியுள்ள நிலையில் மூன்றாவதாக மேற்படி நபர் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## குற்றம் நிரூபண...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் திறைசேரி பிணைமுறிப்பத்திர விவகாரம் சம்பந்தமாக சாட்சியமளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஜனாதிபதி ஆணைக் குழு முன்பாக நேற்றுமுன்தினம் 10.30 மணிக்கு ஆஜராகி சாட்சியமளித்திருந்தார்

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அரசாங்கம் எடுக்கும் முடிவு என்னவென ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுவதையும் கேட்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும் பிணைமுறிப் பத்திர விவகாரம் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சர் ரவி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணமானால் நல்லாட்சி அரசாங்கம் மற்றும் கட்சி ஆகியன துணிந்து அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் எனவும் அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார். (செ-11)

# யாழ்ப்பாண பல்கலைக்கு இரண்டு புதிய கட்டடங்கள்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடங்களுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவை இணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் குறிப்பிட்டதன் பிரகாரம், யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொகுதி, தொழில்நுட்ப பிரிவு என்பவற்றுக்காக புதிய கட்டடம் மற்றும் மருத்துவ பீடத்துக்கான 08 மாடிகளைக் கொண்ட பயிற்சி கட்டடம் ஆகியவை நிர்மாணிக்கப்படவுள்ளன.

இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரத்தினை உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்துள்ளார். (செ-11)

## படகுச் சேவை பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு-குறிகாட்டுவானுக்கு இடையில் படகு சேவைகளை வழங்கி வருகின்ற படகு உரிமையாளர்கள் 2ஆவது நாளாக நேற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளனர்.

மேற்படி வழியில், படகு சேவைகளை மேற்கொள்வதற்கு சில தனியார் படகுகள் தயாராகி வருவதற்கு எதிராகவே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மேற்படி போராட்டம் தொடர்பில் நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கிரி கோபாலசிவம் கூறுகையில், தென்பகுதியைச் சேர்ந்தவர்களால் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் வெள்ளோட்டத்துடன் ஆரம்பமான நயினாதீவு எக்ஸ்பிரஸ் படகை சேவையிலிருந்த நிறுத்தும் வரை பணிப்பகிஷ்கரிப்பு தொடரும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் நயினாதீவு எக்ஸ்பிரஸ் புதிய படகுச் சேவைக்கும் நயினாதீவு விகாராதிபதிக்கும் தொடர்புகள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மின்னல் குறூப்; ஒருவர் கைது

வடமராட்சி வதிரிச்சந்திப்பகுதியில் நின்று பெண்களுடன் சேட்டை விட்டு வந்த மின்னல குறூப்பைச்சேர்ந்த ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் நின்று வீதியால் சென்றுவரும் பெண்களுடனும் பாடசாலை மாணவிகளுடனும் சேட்டை விடுவதாக பல தரப்பட்ட மக்களாலும் பொலிஸாருக்கு தகவல தெரிவிக்கப்பட்ட நிலையில் நேற்று மாலை அப்பகுதியில் மதுபோதையில் சிலர் நிற்பதாக பொலிஸாருக்கு தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து பொலிஸார் அப்பகுதிக்கு சென்ற போது அங்கிருந்த சிலர் தப்பிச்சென்ற நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## 20ஆவது திருத்தம்; அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சகல மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்தும் வகையிலான ஏற்பாடுகள் அடங்கிய அரசியலமைப்புச் சட்டத்தின் 20வது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 20வது திருத்தம் மற்றும் 1988 இலக்கம் 2 மாகாண தேர்தல் சட்டம் என்பன சட்ட ஆவண வரைவினால் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடவும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இலத்திரனியல் கடவுச்சீட்டு அறிமுகம்

(கொழும்பு)

நாட்டில் இலத்திரனியல் கடவுச்சீட்டினை அறிமுகம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடமேல் அபிவிருத்தி, கலாசார விவகார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன மற்றும் தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ ஆகியோர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவை இணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக நேற்று தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இதன்பிரகாரம் இலங்கை பிரஜைகளுக்காக வேண்டி இலத்திரனியல் வெளிநாட்டு கடவுச்சீட்டு ஒன்றினை அறிமுகம் செய்வது தொடர்பிலான நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் கீழ் அனைத்து வகை தகவல்களையும் உள்ளடக்கிய சிம் அட்டை வடிவிலான இலத்திரனியல் மாதிரி ஒன்று வெளியிடப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## வடக்கு சபை உறுப்பி...



யாழ்.வணிகர் கழகத்தின் அலுவலகத்தில் நேற்று மாலை 4.30 மணிக்கு இவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். சிரேஷ்ட சட்டத்தரணியும் சமாதான நீதவானுமாகிய V.T.சிவலிங்கத்தின் முன்னிலையில் இ.ஜெயசேகரம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

இதன்படி மாகாண சபையின் அங்கத்துவக் கட்சிகளுக்கான சுழற்சிமுறை ஆசனம் இம்முறை தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் முதலில் இருந்த ரெலோ கட்சியைச் சேர்ந்த மயூரனின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையிலேயே இ.ஜெயசேகரம் வட மாகாண சபையின் புதிய உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார். இவ் பதவிப் பிரமாண நிகழ்விற்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபை உறுப்பினர்களான கே. சயந்தன், அ.பரஞ்சோதி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் சுழற்சி முறையிலான ஆசனம் புளொட் கட்சிக்கே வழங்க வேண்டும் என அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்த கடிதத்தில் தமிழரசு கட்சி ஒருதலைப் பட்சமாக சர்வாதிகாரத்துடன் நடந்து கொள்வதாக கூறி சாடியிருந்தார். எனினும் அது தொடர்பில் இரா.சம்பந்தனால் பதில் எதுவும் வழங்கப்படாத நிலையில் சுழற்சி முறையிலான ஆசனம் யாழ்.வணிகர் கழக தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (செ-4)


## உடனடி வேலைவாய்ப்பு

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

- அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம் வெளியகம், இருபாலாரும்)
- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும்)
- பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (சிங்களம் கட்டாயம் தெரிந்திருத்தல் வேண்டும்) (பெண்)

### தகைமை

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வசிப்பது மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

தகைமையும் ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் 07.08.2017 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

வலம்புரி

அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

-பொது முகாமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான இருவரு....

அத்துடன் குறித்த தினத்தில் அடையாள அணிவகுப்புக்கு ஏற்பாடு செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளது. இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மேற்படி வாள்வெட்டு சம்பவத்தில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரின் கை பலத்த காயமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனை அடுத்தே இவர்கள் இருவரையும் நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை, யாழ்.நீதவானால் மேற்படி விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவர்களோடு சேர்ந்து பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட ஏனைய சமூக விரோத கும்பல்களையும் பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். (செ-4)




விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/=

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது) (C-9206)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

8ம் அணி மாணவர்களும்
வேலைவாய்ப்பில் இணைந்தனர்
O/L உடன்
மாதம் 25,000/-க்கு
மேல் சம்பாதிக்க



நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு
பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி
வெற்றிநடை போடும்

Diploma in Tourism & 9ம் அணி
Hotel Management

3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்

புதிய பிரிவு ஆரம்பம்:
ஒகஸ்ட் 7 திங்கள் 9மணி

பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி
ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
(C-9244)

அனுமதிகளுக்கு 077 3616 798
021 222 0011

175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.


## அரசியல் கைதிகளி...

களின் உறவினர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்து மேற்படி கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களில் ஒரு பகுதியினர் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை நேற்றைய தினம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் தலைமையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.நீண்டகாலமாக சிறையில் இருக்கும் உறவுகளின் வழக்குகள் அநுராதபுர நீதிமன்றில் நடைபெற்று பின் பல வருடங்களாக வவுனியா மேல் நீதிமன்றில் தற்போதுவரை நடைபெற்று வருகின்றன.

எனினும் மீண்டும் எமது வழக்குகளை சிங்கள பகுதிகளுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதனை சிறையில் உள்ள எமது உறவுகளே கூறியுள்ளார்கள். எனவே இது தொடர்பில் அரசாங்கத்திற்கு அழுத்தத்தை வழங்கி எமது உறவுகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக மூன்று அரசியல் கைதிகளுடைய வழக்குகள் வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெற்று கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்று வந்த நிலையில் தற்போது அந்த வழக்குகளை சிங்கள பகுதியை சேர்ந்த நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் அவசர அவசரமாக முதலமைச்சரை சந்தித்த அரசியல் கைதிகளின் உறவுகள், முதலமைச்சரிடம் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்ட போதிலும், இறுதியாக வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலில் தமது உறவுகளின் பெயர்கள் இல்லை என்பது தொடர்பிலும் முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இது தொடர்பில் தாம் சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். மேலும் நல்லாட்சி என்று கூறிகொள்ளும் இந்த அரசாங்கம் எம்மை தொடர்ந்தும் ஏமாற்றி வருவதாகவும், இவ்வாறு செய்பவர்களை நல்லாட்சி என்று கூற முடியாது எனவும்,

தமது உறவுகளை ஆயுதம் ஏந்தினால் தான் விடுவிக்க முடியும் என அவர்களது பிள்ளைகளும் அவர்களது நண்பர்களும் சிந்தித்தால் மீண்டும் ஒரு போராட்டம் ஏற்படலாம். ஆகவே இவை தொடர்பில் இந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்து பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஊடகங்களிடம் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர். (செ-4)


NEW SCIENCE HALL
2019 CHEMISTRY
இரசாயன கணிப்புகள்
ஆரம்பம்: 05.08.2017 Sat 9.30am
By: க.சிவத்திரன் B.Sc (Hons)
(C-9224)


## வகுப்புக்களுக்கு...

மற்றும் கருத்தரங்குகளை நடத்த நேற்று நள்ளிரவு தொடக்கம் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு நேற்று நள்ளிரவு 12 மணி தொடக்கம் பரீட்சை நிறைவடையும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரையில் பரீட்சார்த்திகளுக்காக மேலதிக வகுப்புக்களை நடத்துதல், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பரீட்சைக்குரிய மாதிரி வினாப்பத்திரங்களை அச்சிடுதல், விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

## முச்சக்கரவண்டி...

வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின்புறத்தில் மோதியுள்ளது. இதன்போது நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் அமர்ந்து இருந்த வயோதிபப்பெண் படுகாயமடைந்துள்ளார்.

மயக்கமுற்றநிலையில் மீட்கப்பட்ட அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். எனினும் அங்கு அவர் இறந்த நிலையிலையே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-312)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்



## விசுவலிங்கம் தவமணிதேவி

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.98, YMCA வீதி, பாரதிபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் தவமணி தேவி அவர்கள் நேற்று (02.08.2017) புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னம்மா - செல்லையா (அமரர்) தம்பதியினரின் மகளும், மாணிக்கம் - நாகமுத்து (அமரர்) தம்பதியினரின் மருமகளும், விசுவலிங்கம் (அமரர்) அவர்களின் மனைவியும், அன்னலட்சுமி (அமரர்), சுந்தசுவாமி ஆகியோரின் சகோதரியும், பிரபாகரன் (ஆசிரியர் - மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), சசிகலா (பணியாளர் - கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை), சசிகரன் (2006 யாழ் பல்கலைக்கழக மாணவன்), ஜெயகரன் (பணியாளர் - காகிள்ஸ் அக்றி பூட், அறிவியல்நகர்), பிரபகலா (ஆசிரியர் - தூயவன் முன்பள்ளி, திருவையாறு), ஜெயகலா ஆகியோரின் தாயாரும், பிரபாகரி, சசிகரன் (ஆசிரியர் - கிளி/கரியாலை நாகபடுவான் இல.02 அ.த.க.பா) ஆகியோரின் மாமியும், பிரவின், லதுர்வீன், அதியன், ஆதிசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: 0779693059, 0771640482

தகவல்: குடும்பத்தினர்

(C-9243)


எவரெஸ்ட் குமாரிக்கா
சந்தனாதி தைலம்



■ நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
■ இளநரையை போக்கவும்
■ பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
■ கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
■ ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
■ ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571
(9447)

UNREGISTERED TOYOTA
KDH SUPPER GL HIACE VAN
MODEL YEAR:2013/12
COLOUR: SILVER

KDH HIGHROOF GL
MODEL YEAR: 2014
DUAL AC
COLOUR: WHITE





விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு
(சி-9242)

SMART KINGS (PVT)LTD.
077-3754040
12, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org